
# சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

ஆகஸ்ட் – செப்டெம்பர் 2013



கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்!
நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும்,
வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்











**04** சாதித்தவர்கள்
கர்த்தராகிய கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் தமது வாழ்வில் அவருக்கு முதலிடம் கொடுத்து முன்னேறுவார்கள்

**06** கேட்கிறதற்குக் காதுள்ளவன்
தேவனுடைய சத்தத்தைக் கேட்பதானது எத்தனை ஆனந்த பாக்கியம்!

**10** தியான வாழ்க்கை
கிறிஸ்துவின் உபதேசத்தில் சுத்திகரிக்கப்பட்ட வாழ்வே கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் வாழ்வாகும்!

**14** நல்ல சமாரியன்
ஆண்டவரின் சாயலாக படைக்கப்பட்ட மனிதர்களிடம் அன்புகூருவதே உண்மையான அன்பாகும்!

**18** வேதனையும் சாதனையும்
புதிய காரியம் உருவாக வேண்டுமென்றால் நாம் வேதனையை சகித்தாக வேண்டும்!

**22** கற்களின் நிதர்சனம்
கடந்தகாலங்களில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

**29** கேள்வி பதில்
சோதனைகளை மேற்கொள்வதற்கான வேதாகம வழிகாட்டல்.



**நிர்வாக இயக்குனர்:** திரு. மயூக பெரேரா

**முகாமையாளர்:** திரு. ரவிசங்கர்

**சஞ்சிகை ஆசிரியர்:** திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120 A, Dharmapala Mawatha, Colombo - 07. Sri Lanka. T: 4691500, F: 2698843, **E:** info@backtothebible.lk, **W:** www.backtothebible.lk

# நிர்வாக இயக்குனரிடமிருந்து



நிர்வாக இயக்குனர்
மயூக பெரேரா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

ஜெபத்தைப்பற்றி ஏற்கனவே எழுதப்பட்டுள்ளவற்றோடு சேர்த்து, இதையும் எழுதுவதைக்குறித்து ஒருவித குற்றவுணர்வு அடைகின்றேன். ஏனென்றால் அநேகர் கூறுகிறவாறு, **'ஜெபம் பெருமளவு எழுதப்பட்டாலும் கடைப்பிடிப்பது சிறிதே'** என்பது மெய்ப் போல் தோன்றுகிறது. நாம் ஜெபத்தைக்குறித்து, அதிகமதிகமாய் வாசிக்கிறபோதெல்லாம், எமக்குக் கிடைத்திருக்கின்ற பரம சிலாக்கியத்தை நாம் புறந்தள்ளுகிறோமென்ற குற்ற உணர்வுக்கு எம்மை ஆளாக்குகின்றது. என்னைப் பொறுத்தவரை, இது உண்மையாகவே உள்ளது. நான் ஒரு பெரும் ஜெப வீரனல்ல. ஆனால் தேவையென அறிந்திருக்குமட்டும் அல்லது உண்மையாகவே வேண்டிய அளவிற்காகிலும் நான் ஒருபோதும் ஜெபிப்பதில்லை. நான் ஜெபிப்பதுண்டு... ஆனால், இதுபோதும் என்று கூறுமளவிற்கு ஜெபிப்பதில்லை. எனினும் ஜெபிப்பதற்கு எப்பொழுதும் பல விடயங்கள் அங்கே உண்டு.

ஜெபத்துடனான உங்கள் ஈடுபாடு எப்படியுள்ளது? ஜெபிக்கிறீர்களா... போதுமென்றவரை? ஜெபிக்க வேண்டிய விதமாகவே ஜெபிக்கின்றீர்களா?

எப்பொழுது, எதற்காக, யாருக்காக ஜெபிக்கிறோம் என்பது நாம் யாரென்று எமக்கு வெளிப்படுத்துகிறது. நீங்கள் யாரென்று அறிந்துகொள்ள ஆவலுடன் இருப்பீர்களானால், உங்கள் ஜெப வாழ்வை ஆராய்ந்து பாருங்கள். அதை செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**எப்பொழுது நீங்கள் ஜெபிக்கவேண்டும்?** அவசர தேவையுள்ள நேரத்தில் மட்டும்தான் தேவனுடன் பேசுகின்றீர்களா? அல்லது தினமும் தவறாமல் அவருடன் உரையாடுவதுண்டா? அதிகமாக ஜெபிப்பது பகிரங்க நிலையிலா, அந்தரங்கத்திலா? நீங்கள் பிறருடன் சேர்ந்து ஜெபிப்பதுபோலவே, தனிமையிலும் ஜெபிப்பதுண்டா? இயேசுவின் வாழ்க்கையையும் மற்றும் பவுலையும் பார்க்கும்போது, அவர்கள் அனர்த்த நேரத்தில் மாத்திரமல்ல, எல்லா நேரங்களிலும் தவறாமல் ஜெபிக்கின்றவர்களாக இருந்தார்கள் எனக் காண்கிறோம். இவர்கள் எம்மை தனிமையில் ஜெபிக்கும்படி வலியுறுத்தியுள்ளதோடு, பிறருடன் சேர்ந்து ஜெபிக்க ஊக்கப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான முறைகளில், நாம் ஜெபத்தில் செயற்படாவிடில், அதன் முக்கியமான அம்சங்களை இழந்துவிடுகிறோம். ஜெபிக்கவேண்டிய விதமாகவே ஜெபிக்காதவர்களாக இருக்கிறோம்!

**யாருக்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும்?** உங்களுடைய வேண்டுதல்கள் உங்களைப் பற்றியதா, அல்லது அதிகமாக பிறரை மையமாகக்கொண்டதா? பிரதானமாக, உங்களுக்கு அன்பானவர்களுக்காகவா அல்லது உங்கள் எதிரிகளுக்காகவா (தவறிழைத்தவர்கள், எரிச்சலூட்டுபவர்கள்) பரிந்துமன்றாடுகிறீர்கள்? நீங்கள் அறிந்தவர்களுக்காக மாத்திரம் ஜெபிக்கின்றீர்களா? அல்லது அறியாத நபர்களுக்காகவும் ஜெபிக்கின்றீர்களா? இயேசு மற்றும் பவுலின் முன்மாதிரியான படிப்பினைகளை நாம் பின்பற்ற விரும்பினால், நாம் எமக்காக மாத்திரமல்ல பிறருக்காகவும், நாம் அறிந்தவர்களுக்காக மாத்திரமல்ல எதிரிகளுக்காகவும், அன்பானவர்களுக்காக மாத்திரமல்ல நாம் ஒருபோதும் சந்திக்காத நபர்களுக்காகவும், ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். உங்களது ஜெபப் பட்டியலில் இவ்வாறானோர் உள்ளடக்கப்பட்டுள்ளனரா? அது அவசியமானதே!

**எதற்காக நீங்கள் ஜெபிக்கவேண்டும்?** பிறருக்காகவும் உங்களுக்காகவுமான உங்கள் ஜெபங்களில் சரீர மற்றும் பொருள்சார்ந்த தேவைகளை மையப்படுத்தி ஜெபிக்கிறீர்களா அல்லது ஆவிக்குரிய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஜெபிக்கிறீர்களா? வேத புத்தகத்திலே, இயேசு மற்றும் பவுல் ஏறெடுத்த ஜெபங்களில் கூறப்படுகின்றவிடயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்கள் சரீர மற்றும் பொருள்தேவைகளை தவிர்க்கவில்லை எனினும், ஆவிக்குரிய தேவைகளுக்கே முன்னுரிமை கொடுத்தார்கள் என்பது தெளிவாகின்றது. வேதத்தில் ஜெபத்தைக் குறித்ததான வசனங்களை ஆராய நேரம் கொடுப்பதோடு முன்னுரிமைகளை மையப்படுத்தி உங்கள் ஜெப வாழ்வை வடிவமைத்துக் கொள்ளுங்கள்.

எனது பிரார்த்தனையென்னவென்றால், எல்லா நேரங்களிலும் எல்லா மனிதர்களுக்காகவும் ஏற்ற முன்னுரிமையுடன் நீங்களும் நானும் ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்பதே!

கிறிஸ்துவுக்குள்,

MAYUKHA

மயூக பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாதித்தவர்கள்...




இந்த உலகில் எந்த குறையில்லாமல் சாதித்தவர்களை விட, குறையிருந்தும் சாதித்தவர்கள் தான் அதிகம். அவர்களது சாதனைகளுக்கு அளவே இல்லை. இந்தக் கட்டுரையில் "கேட்கும் திறனை இழந்தும்" சாதித்த, வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் பிரபலமான ஒரு சில நபர்களைக் குறித்து பார்க்கப் போகின்றோம்.

ஒரு மீன் கடலிலே வாழுகின்ற போதிலும் அதற்குள் கடலின் உப்பு கலப்பதில்லை. அவ்வாறே, பாவம் நிறைந்த இந்த உலகத்தில் பாவத்தை வெறுத்து வாழ்பவர்கள் ஒரு சிலரே. தங்கள் வாழ்வில் முகங்கொடுக்கும் எதிர்மறையான சூழ்நிலைகளிலிருந்து மீள்வதற்கு நீண்ட நாட்கள் அல்லது நீண்ட வருடங்கள் பிடிக்கும் என்ற எண்ணமுடைய பலர் வாழ்கின்ற இக்காலத்தில், தமது சரீர குறைபாடுகளின் மத்தியிலும் தங்களுக்கு குறை இருக்கிறது என்ற எந்த ஒரு எண்ணமும் இல்லாமல், தன்னம்பிக்கை யுடன் எந்த ஒரு செயலையும் துணிச்சலோடு செய்து, சாதனை படைத்து வருகின்றவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். நாமும் நமது பாரங்களை கிறிஸ்துவிடம் ஒப்படைத்துவிட்டு அவரை நோக்கிப் பார்த்து ஓடவேண்டி யவர்களாக இருக்கின்றோம்.

கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைக்கின்றவர்களில் சிலர், இன்றும் பலவிதமான குறைகளை பிறரின் மீது கூறி குற்றம்சாட்டு பவர்களாகத்தான் வாழ்கின்றார்கள். தமது குற்றங்களை மறைக்காமல், அதிலிருந்து மீள முயற்சிகளை எடுப்பதில்லை. எனினும் இவ்வுலக வாழ்க்கையை துணிச்சலோடு வாழ்ந்து காட்டி, பாவத்திலிருந்தும் எதிர்மறையான சூழ்நிலைகளிலிருந்தும் மீண்டு, ஒரு நல்ல நிலையை அடையவேண்டும் என்ற எண்ணத்தை நாம் எமக்குள் வரவழைக்கவேண்டும்.



## தாமஸ் அல்வா எடிசன்

உலக வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற சிறந்த கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழிலதிபர்களில் ஒருவர் தான் தாமஸ் ஆல்வா எடிசன். இவர் தான் தற்போது அனைவரது வீட்டிலும் எரிகின்ற மின்சார மின்குமிழிகளை (பல்புகளை) கண்டுபிடித்தவர். இவருக்கு காது கேட்காது. ஏனெனில் குழந்தைப் பருவத்தில் இவருக்கு வந்த ஒரு நச்சுக்காய்ச்சல், அவரது காதில் உள்ள சவ்வை பாதித்து, காது கேட்காமல் போயிற்று. தனது பெலவீனத்தின் மத்தியிலும் அவர் உலக புகழ் பெற்றவராக திகழ்ந்தார்.



## ஹெலன் ஆடம்ஸ் கெல்லர்.

இவரது ஒரு காது செவிடாக இருந்தும், தனது திறமையால் பெரிய சாதனையை புரிந்து, வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். இவர் ஒரு அமெரிக்க எழுத்தாளர், அரசியல் ஆர்வலர் மற்றும் பேராசிரியர். இவர் பிறப்பிலேயே பார்வை மற்றும் கேட்கும் திறனை இழந்த வரல்ல. எனினும், குழந்தைப் பருவத்தில் அவரைத் தாக்கிய ஒரு கொடுமையான நோயின் காரணமாக, இவரது பார்வை மற்றும் கேட்கும் திறன் குறைவடைந்து போயிற்று. இருப்பினும் இவர் எதையும் தன்னால் சாதிக்கமுடியும் என்ற மனதைரியத்துடன் போராடி, தன் வாழ்வில் முன்னேறியுள்ளார். இவரைப் போல, நாமும் எமது தொழிலில், படிப்பில், வியாபாரத் தில், அலுவலகத்தில், கல்வியில் விடாமுயற்சியுடன் திகழவேண்டுமென உறுதி கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரோல்ட் மேக்ரத்.



இவர் ஒரு அமெரிக்க நாவலாசிரியர், திரைக்கதை மற்றும் சிறுகதை எழுத்தாளர். இவரது நாவல்கள், அதிக விற்பனையான நாவல்களில் ஒன்றாக உள்ளது. இவருக்கும் கேட்கும் திறன் இல்லை. இவரது ஊக்கமான முயற்சியின் காரணமாக, அவர் அமெரிக்காவில் ஒரு பிரபலமான கேட்கும் திறன் இல்லாமல் சாதித்தவர்களில் ஒருவராக இருக்கிறார். சரீரத்திலுள்ள அங்க குறைபாடு உண்மையில் எம்முடைய வெற்றிக்கு ஒரு தடையாக இருப்பதில்லை என்பதை இவர் உணர்த்துகின்றார்.

நன்றி: இணையம்



## லூட்விக் ஃவான் பேத்தோவன்



இவர் ஒரு ஜேர்மன் இசையமைப்பாளர் மற்றும் இசைக்கலைஞர். இவரிடமுள்ள அற்புதமான திறமையின் மத்தியிலும் துக்கத்திற்குரிய விஷயம் என்னவென்றால் இவருக்கும் சரிவர காது கேட்காது. ஆனால் இவர் தனது திறமையால் ஒரு சிறந்த இசையமைப்பாளர்களில் ஒருவராக மாறியிருந்தார். மேலும் இவரது காது செவிடு அடைந்திருப்பது, இதுவரை அவரது இசையில் ஒருபோதும் தெரிந்ததில்லை. அவ்வளவு எளிமையான முறையில் ஒரு பிழையுமின்றி இசையை மீட்டுவாராம். எதில் எமக்கு குறையுண்டோ, அதிலே நாம் ஜெயங்கொள்ளுகின்றவர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை ஒருபோதும் நாம் மறக்கலாகாது.

## ஜானி ரே



ஜானி ரே புகழ்வாய்ந்த அமெரிக்க பாடலாசிரியர், பாடகர் மற்றும் பியானோ வாசிப்பதில் சிறந்தவர். இவரும் இடைப்பட்ட காலத்தில் தான் கேட்கும் திறனை இழந்தார். ஆனால் தன்னுடைய காது கேட்காவிட்டாலும் சிறந்த விதத்தில் இசைக் கருவிகளை இசையமைப்பதில் சிறந்தவர் என்பதை தனது உழைப்பினால் நிரூபித்து விட்டார். பின் சில வருடங்கள் கழித்து, காது கேட்பதற்குப் பயன்படும் கருவியை உபயோகப்படுத்தி இசையமைக்க ஆரம்பித்து விட்டார். இவரைப்போல இன்றைய புதிய கண்டு பிடிப்புக்களைப் பயன்படுத்தி எமது தாலந்துகளை மேம்படுத்திக்கொள்ள வாஞ்சையுள்ளவர்களாக நாமும் காணப்பட வேண்டுமல்லவா.

இந்த உலகில் பாவமில்லாத மனிதர்கள் யாருமே இல்லை. அனைத்து மனிதர்களும் பாவம் செய்து கெட்டுப்போனார்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. கெட்டுப்போன மனித சந்ததியினரை மீட்கும்படியாகவே தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனிதனாக இந்தப் பூமியில் வந்து பிறந்தார். அவரே குறையுள்ள மனிதர்களை பரிபூரணமுள்ள தேவனுடைய புனிதர்களாக மாற்றி வருகின்றார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை சொந்த வாழ்வில் எஜமானாக ஏற்றுக்கொண்டு, அவரை இரட்சகராக அறிக்கையிட்டு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு தேவன் கிருபை செய்துள்ளார். இன்றே உங்களுடைய நிலைமை எவ்வாறாக இருந்தாலும்சரி, எவ்வளவு மோசமானதாக உங்கள் வாழ்வின் நிலை காணப்பட்டாலும் சரி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள். அவர் தரும் சமாதானத்தைப் பெற்றுக்கொண்டு, உங்கள் வாழ்வினை இன்றே ஆளுகை செய்பவராக ஜெயங்கொள்ளுபவர்களாக மாறுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்கிறதற்குக் காதுள்ளவன்

டாக்டர் வுட்ரோ குரோல்

சிருஷ்டி கர்த்தராகிய தேவன் நமக்கு கொடுத்த செல்வங்களுள் சிறந்ததாகக் கருதப்படுவது கேட்கும் செவியாகும். அதுவும் இரு செவிகளை கொடுத்துள்ளது இன்னும் சிறப்புடையதாக அமைகிறது.

ஒரு தாயின் குரலுக்கு சேய் அமைதிப்படும்; ஒரு மேய்ப்பனின் குரலுக்கு ஆடுகள் செவிகொடுக்கும். ஆனால் சிலவேளைகளில் சில குரல்களுக்கு நமது செவி கேளாமல் போய்விடுகிறது. திருமண வீட்டில் அலறும் ஒலி பெருக்கியின் பாடல்களுக்கு நம் செவிகள் அடைபட்டு உற்றார், உறவினர்களோடு அளவளாவி மகிழ்ச்சி அடைகிறோம் அல்லவா? சிலரது பேச்சில் நாம் உறங்கிவிடுவதும் உண்டு. அவ்வேளைகளில் நமக்கு காதுகள் இருந்தும் அவை செயல்படுவதில்லை. நமது கேட்கும் திறனையும் அதற்கு நாம் செயல்பட வேண்டிய விதத்தைக் குறித்தும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விதைக்கிறவனைப் பற்றிய உவமை மூலமாக நன்கு விளக்கியுள்ளார்.

கலிலேயாக் கடலோரத்தில் ஒரு படகில் ஏறி இயேசு கிறிஸ்து ஜனங்களுக்குப் போதித்தார். மாற்கு 4:3-8 என்ற வேதபகுதியில் இந்த உவமையை நாம் வாசிக்கிறோம். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்தி நூல்களிலும் இது காணப்படுகிறது. ஆனால் அந்த உவமையைப் பற்றிய விளக்கத்தை தமது சீஷர்களுக்கு மட்டுமே இயேசு விளக்கினார். தேவனுடைய வசனமாகிய விதை நான்கு வகையான இடங்களில் விதைக்கப்படுகிறது.

ஏதேன் - திருமண சேவை
அடுத்த சஞ்சிகையில்
எதிர்பாருங்கள் - ஆசிரியர்.

## வழியருகே விழுந்த விதை




விதைக்கிறவன் தூவிய சில விதைகள் வயலின் வழியருகே விழுந்தன. வயலின் ஓரங்களில் மனிதர்கள் மிருகங்கள் நடந்து செல்லுவதால் பொதுவாக அந்த இடம் உழப்பட்டிருக்காது; மண் இறுகியிருக்கும். எனவே அவ்விதை மண்ணுக்குள் செல்லமுடியாத நிலைமை காணப்படும். மண்ணின் மேலேயே கிடந்ததால் ஆகாயத்துப் பறவைகள் வந்து அந்த விதைகளைத் தின்றுவிட்டன. அந்த விதைகளினால் விதைத்தவனுக்கு எந்த ஒரு உபயோகமும் இல்லை.

இதுபோன்றே தற்காலத்தில் வேதவசனங்கள் அநேக இடங்களில் பிரசங்கிக்கப்படுகிறது. மக்களும் திரள் கூட்டமாய் வந்து ஆர்வமாய்க் கேட்கின்றனர். ஆனாலும் பலர் அதைக் கேட்டுவிட்டு ஒரு மாறுதலும் அடையாமல் வந்தவிதமாகவே திரும்பிச் சென்றுவிடுகின்றனர். தேவவசனம் அவர்கள் இருதயத்துக்குள்ளும் ஆத்துமாவுக்குள்ளும் நுழைய வாய்ப்பு கிடைக்கவில்லை. "நீ கேட்ட சத்தியம் நல்லதுதான். உன்னுடைய மார்க்கமும் மதமும் முக்கியமானவைகள். அவைகளில் உள்ள நல்லவற்றை நீ பின்பற்று. எல்லா மதங்களும் ஒரே இறைவனைத்தான் போதிக்கின்றன. இந்த வேதாகமம் சொல்லும் காரியங்களை நீ பின்பற்ற வேண்டிய அவசியமில்லை" என்று கூறி சத்துருவாகிய சாத்தான் அவர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி வசனத்தை எடுத்துப் போட்டு விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### கற்பாறை நிலத்தில் விழுந்த விதை:

சில விதைகள் அந்த வயலின் அருகேயுள்ள கற்பாறை நிலத்தில் விழுந்தன. அங்கே அவ்விதை முளைப்பதற்குத் தேவையான மண், நீர், காற்று மற்றும் சூரிய ஒளி ஆகியவை கிடைத்தன. எனவே அவைகள் முளைக்க ஆரம்பித்தன. ஆனால் அவைகளின் வேர் ஆழமாய் செல்ல முடியாதபடி கற்பாறைகள் தடுத்து விட்டன. எனவே சூரிய ஒளியின் வெப்பக் கதிர்கள் அதின் மேல் பட்டவுடன் அவைகள் ஆழமாய் செல்ல முடியாததால் அச்செடிகள் கருகிவிட்டன. இதுபோலவே இரண்டாம் வகை மக்கள் வசனத்தைக் கேட்டவுடன் அதிக உற்சாகம் அடைகின்றனர். ஆனால் அவர்கள் கேட்ட வசனம் வேர்விட்டு வளருவதில் தடை வருகின்ற பொழுது விசுவாசம் அழிந்துவிடுகிறது.

அதாவது சில சந்தேகங்கள் எழும்பும்போதோ, அல்லது அறிவியல் கோட்பாடுகளைக் கேள்விகளாகக் கேட்கும்போது ஏற்படும் தடுமாற்றத்தினால் அவர்களது விசுவாசம் ஆழமாய் இராதபடியினால் வசனம் வளர்ந்து பலன்தர முடியாதபடி கருகிவிடுகிறது.

### முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதை:



சில விதைகள் அவ்வயலின் அருகே உள்ள முள்ளுள்ள இடங்களில் விழுந்தன. விதை வேர்விட்டு வளர்ந்தன. வளர்ச்சியில் ஒரு குறைவுமில்லை. ஆனால் நாட்கள் செல்லச்செல்ல முட்கள் வேகமாக வளர்ந்து அச்செடிகளை வளரவிடாமல் செய்துவிடுகின்றன. வேர் இருந்தாலும் அச்செடிகளுக்குத் தேவையான உணவு களைத் தயாரிக்க அவைகளுக்கு சூரிய ஒளி மற்றும் காற்று ஆகியவை கிடைக்காதபடி அந்த முட்செடிகள் நெருக்கிப் போட்டமையால் அவைகள் பெலவீனப்பட்டு வாடிவிட்டன். இதுபோலவே வேதவசனங்களைக் கேட்ட வர்கள் மகிழ்ச்சியுடனே ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் உலகக் கவலைகள் அவர்களை நெருக்கும்போது அவ் வசனத்தின்படி நடக்க அவர்களால் முடியவில்லை. எனவே வசனம் வளர இயலாது வாடிவிடுகின்றனர்.

வேதாகமத்தை நான் கருத்தூன்றி வாசித்து, ஆழ்ந்து தியானிக்கும்போது ஒரு நாளிதழை வாசிப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது என்று நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. சத்திய வேதத்தின் இப் பண்பு என்னைக் கவர்ந்ததொன்று. உலகில் நடக்கும் காரியங்கள் யாவும் இப்புத்தகத்தில் காணப்படுகின்றது. இந்த நூற்றாண்டில் நமக்கு கவலையளிக்கும் மூன்று காரியங்கள் யாவை என நாம் ஆராய்ந்து பார்த்தால் அது மாற்கு 4:19 ல் காணப்படுகிறது. வசனத்தைக் கேட்டும், உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சை களும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப் போகிறார்கள்.

#### முதலாவதாக உலகக் கவலைகள்:

கவலையில்லாத மனிதர் இப்புவியில் எவரும் இல்லை என்று அநேகர் கூறுகின்றனர். குடும்ப உறவு களில் பிரச்சனை, வியாதி, பணக்கஷ்டங்கள், வறுமை என பல்வேறு காரியங்கள் வேதவசனத்தைக் கேளாத படி மனிதர்களை திசை திருப்புகின்றன.

#### இரண்டாவதாக ஐசுவரியத்தின் மயக்கம்:

தேவனுக்கென்று செலவிட எனக்கு போதுமான நேரமில்லை; இன்று எனக்கு ஒரு கூடுகை, நாளை ஒரு சந்திப்பு, இரவு ஒரு செயற்குழு கூட்டம்; இன்னின்ன இடங்களுக்குச் செல்லவேண்டும்; இன்னின்ன மக்களை பார்க்கவேண்டும்; எனவே நேரமே இல்லை என்று சிலர் கூறுவர். உலகக் காரியங்களுக்கு அதிக முக்கியத்து வம் கொடுப்பதால் தேவனுடைய பாதத்தில் காத்திருக்க அவர்களுக்கு நேரம் இல்லை.

#### மூன்றாவதாக பிற காரியங்களில் உண்டாகிற இச்சை:

வேதத்தை வாசிக்க எனக்கு அதிக வாஞ்சை யுண்டு, ஆனால் நேரமில்லை; நேரமிருந்தால் கட்டாயம் வாசிப்பேன் என்று சிலர் சாக்குபோக்கு சொல்லுவது உண்டு. ஒரு நாளைக்கு 24 மணிநேரம் உண்டே, நாம் வேதத்தில் ஒரு அதிகாரத்தை வாசித்து தியானிக்க உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவை? ஒவ்வொருநாள் காலையும் நடைபயணம் செல்லவும், உணவு உண்ண வும், செல்லப் பிராணிகளைக் கொஞ்சவும், இரவில் 3 மணி நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க வும் நேரம் செலவிடும் உங்களுக்கு வேதத்தை கொஞ்சம் வாசித்து தியானிக்க நேரம் கிடைக்கவில்லை என்று சொல்லுவது நியாயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்ல நிலத்தில் விழுந்த விதை:

இறுதியாக சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தது. அவை ஒன்று முப்பதும் அறுபதும் நூறுமாக பலன் தந்தது. நீங்களும் நூறு மடங்கு பலன்தரவேண்டு மெனில் சத்தியவசனமாகிய வேதத்தில் அதிக நேரம் செலவிடவேண்டும். அதனை வாசித்து, தியானித்து, ஆராய்ச்சி செய்யவேண்டும். ஆவியானவரின் ஒத்தாசை நாடினோமானால் அவர் வேதத்தின் அதிசயங்களை விளக்கிக் காட்டுவார். தேவவார்த்தையில் நாம் செல விடும் நேரமும் அவருடைய சத்தத்தை கேட்க செல விடும் நேரமும் சமவிகிதத்தில் அமையவேண்டும்.

தேவ சத்தத்தைக் கேட்கமுடியாதபடி நமது செவியை விலக்கும் காரியங்கள் இரண்டுள்ளது. ஒன்று, பாவம். நம்முடைய வாழ்வில் பாவம் காணப்படுமாயின் தேவ சத்தத்தை நாம் கேட்கமுடியாது. தேவனுடைய ஒலி அலையிலிருந்து நாம் வேறுபடுவோம். சாத்தான் வசனத்தை எடுத்துப்போட்டு விடுகிறான். பாவத்தில் வாழ்பவர்கள் தேவசத்தத்தைக் கேட்காமல் சாத்தானின் சத்தத்தைக் கேட்பவர்களாய் வாழ்கின்றனர்.

தேவ சத்தத்தைக் கேட்கமுடியாதபடி நமது செவியை விலக்கும் இரண்டாவது காரியம், பெலவீன மான ஒலிஅலை. நமது அறையில் எடுக்காத வானொலி அலைவரிசை வேறு இடத்திலோ அல்லது வெளியிலோ நன்கு எடுப்பதுபோல, நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் பெலவீனர்களாய் இருப்போமானால் தேவ சத்தத் தைக் கேட்பதில் நமக்குச் சிரமம் ஏற்படும். என்னுடைய விருப்பமும் தெரிந்தெடுப்பும் வித்தியாசப்படுமெனில் என் செவி தேவ சத்தத்தை கேட்காதபடி அடைபட்டுவிடும். தேவன் பேசுவது நமக்கு பிரியமில்லையெனில் நமது செவியை நாமே அடைத்துக்கொள்வோம்.

நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்காக குறிப்பிட்ட நேரத்தில் காத்திருப்பது நல்லது. சில வேளைகளில் அவர் நம்முடன் பேசும்போது நம்முடைய இருதயம் கடினப்பட்டிருக்கும்; சிலவேளைகளில் உலக கவலைகள் நம்மை நெருக்கி நிற்கும்; சிலவேளை களில் நம்மில் காணப்படும் பாவம் அவர் சத்தத்தைத் தடுக்கும். ஆனால் நமக்காகத் தம்முடைய ஜீவனைத் தந்தவருடைய செவியோ நம்முடைய கூப்பிடுதலுக்கு எப்போதும் காத்திருக்கிறது. நாமும் அவர் பாதத்தில் காத்திருந்து அவருடைய சத்திய வார்த்தைகளை வாசிக்கும்போது அவர் நம்முடன் பேசுவது நிச்சயம்.

தேவனுடைய வார்த்தையை கேட்க நம்மால் முடியும். அந்த மன்னாவை நாம் உட்கொள்ளமுடியும். விசுவாசிக்க முடியும். வார்த்தையினால் வாழமுடியும், கனிகொடுக்க முடியும். இவ்விதமான ஒரு வாழ்வைத் தான் தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். நான்கு நிலைகளில் மக்கள் உள்ளனர். இதில் அநேகர் முதல் மூன்று நிலைமையிலேயே காணப்படுகின்றனர்.

### முதல்நிலை மக்கள்:

இவர்கள் பாவத்தினால் ஆட்கொள்ளப்பட்டு இருப்பதால் தேவனின் சத்தத்தின் அலை நீளத்தைப் பெறமுடியாத பரிதாப நிலையில் உள்ளனர்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இரண்டாம்நிலை மக்கள்:

இவர்கள் வசனத்தைக் கேட்டும், உலக சத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதினால் தேவ குரலின் அலைநீளம் பெலவீனமாக வந்தடைகின்றது. துன்பம் தொல்லை வரும்போது வேத வசனம் வாடிவிடுகிறது. தேவனுடைய வார்த்தைக்கு நேரம் கொடுத்தாலும் அது கடமைக்காக செய்வதாயிருக்கும். அவர்கள் தேவனால் தாம் போதிக்கப்பட தம்மில் இடம் கொடுப்பதில்லை.

### மூன்றாம்நிலை மக்கள்:


இவர்கள் தேவ வசனத்தைக் கேட்டும் அதனை முழுவதுமாக நம்புவதில்லை. இவர்கள் தமது சொந்த எண்ணங்களையும் கருத்துக்களையும் புகுத்துவதினால் தேவ வசனத்தின் முழுகருத்தையும் புரிந்துகொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.

### நான்காம்நிலை மக்கள்:

தேவ சத்தத்தை துல்லியமாகவும், தெளிவாகவும் கேட்பவர்கள் இவர்களே. அவர்களுடைய இருதயம் வசனத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவமுள்ளதாக இருக்கும். "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" (யோவா.10:27). எனவே கர்த்தருடைய சத்தத்தை தெளிவாய்க் கேட்டதால் இயேசுவை பின்பற்றினார்கள். "கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்; கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்" (சங்.89:15). "அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்.112:1). தொலைக்காட்சி பெட்டியையோ இணையதளத்தையோ தேடிப் போய் நாம் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியாது. தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதை தியானிக்கும்போது மாத்திரமே மகிழ்ச்சியும் ஆனந்தமும் நமக்கு கிடைக்கும். தேவவசனத்தை அறிந்திருப்பது மட்டுமல்ல அவைகளின்படி செய்யவும் வேண்டும். "இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (யோவா 13:17).

அன்பான சகோதரனே, சகோதரியே நீங்களும் தேவ குரலைக் கேட்க வாஞ்சையாயிருக்கிறீர்களா? அவரது வார்த்தையான வேதத்தின் மூலம் உங்களோடு அவர் பேசுகிறார். அதனை அடிக்கடி வாசியுங்கள். அது உங்கள் சுவாசமாக மாறட்டும். அவர் உங்களுக்குச் சொல்லியிருக்கும் காரியங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். வாழ்க்கை வளம் பெறும். தேவனுடைய சத்தத்தைக் கேட்பதானது எத்தனை ஆனந்த பாக்கியம்! வார்த்தையின் மூலம் நம்மோடு உறவாடும் வார்த்தையான தேவனுக்கு துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக!





## வழிகாட்டி

துன்பத்தைக் கண்டு துவண்டிடாமலும்
எதிர்ப்பினைக் கண்டு ஏமாறாமலும்
தோல்வியைக் கண்டு சோராமலும்
விரக்தியைக் கண்டு விழாமலும்
இயேசுவே....
என்னால் நடக்க முடியவில்லை!
ஆயினும் - அன்பரே...
நீர் நடந்து காட்டினீரே....
துன்பம் கொடுத்தாலும் கண்ணீரைத் துடைத்து,
எதிர்ப்புக் காட்டினாலும் பாடுகளைச் சுமந்து,
தோல்வி கண்டாலும் விசுவாசத்தில் வாழ்ந்து
விரக்தி அடைந்தாலும் ஜெபத்தில் ஜெயித்து
நீர் நடந்து காட்டினீரே....
அவ்வாறே
நானும் உம்மோடு நடந்துவர
நீரே எனக்கு வழிகாட்டியருளும்...
என் இயேசுவே!

**இ. வஷ்னீ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவைப் பற்றிய நான்கு முக்கியமான காரியங்கள்.

யோவான் சுவிசேஷம் 17ம் அதிகாரம் நமது இரட்சகர் தம்மைப்பற்றி தாமே கூறிய முக்கிய காரியங் களை அறிவிக்கிறது.

**முதலாவது,** கர்த்தராகிய இயேசு பிதாவை நோக்கி ஜெபிக்கும்போது, "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்" (யோவான் 17:4) என்று கூறி இருப்பதைக் காண்கிறோம். இதுவே கிறிஸ்துவின் அடிப்படை நோக்கம். பரலோகத்திலுள்ள பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிப்படை தத்துவமாய் இருந்தது. அவர் அதனை நிறைவேற்றினார். இதேபோல நமது வாழ்வில் நாமும் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே முழு முதல் நோக்கமாக இருக்கவேண்டும்.

**இரண்டாவதாக,** அவர் கூறியது "நான் செய்யும் படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித் தேன்" (வசனம் 26) என்பதாகும். பிதா தமக்குக் கொடுத்த வேலையை கர்த்தராகிய இயேசு முழுமை யாக செய்து முடித்தார். நமது அறிவின் குறைபாட்டி னால் கிறிஸ்துவின் கிரியைகளில் சில நமக்கு முக்கிய மற்றவைகளாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் இயேசு முக்கியமானவற்றைத்தான் செய்தார். இயேசு செய்த கிரியைகளில் முக்கியமானது, பன்னிரண்டு சீடர் களுக்கு போதித்து பயிற்சியளித்தமையாகும். இந்த முக்கியமான கடமையை இயேசு பூரணமாய் நிறை வேற்றினார். பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் நன்கு பயிற்சி பெற்றவர்களாய் ஊழியத்தை நிறைவேற்றத் தயாராயிருந்தனர். வேறு பல ஊழியங்களையும் நமது ஆண்டவர் நிறைவேற்றி னார். என்றாலும் சீடர்களைப் பயிற்றுவிப்பதே முதலிடம் பெற்றது. ஒருவன் மாத்திரம் இரட்சிக்கப்படாமலே இருந்து, ஆகாதவன் என்று தள்ளப்பட்டபோதிலும் வேறொருவர் அவ்வூழியத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். கீர்த்தி பெற்ற "மலைப் பிரசங்கமும்" பன்னிரு சீடர்கள் முன்னிலையிலேயே நிகழ்த்தப்பட்டது. தமது மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை கிறிஸ்து ஒழுங்காக நிறைவேற்றியதுபோலவே, சீடர்களும் தங்கள் ஊழியங் களை செம்மையாக நிறைவேற்றும்வண்ணம் கிறிஸ்துவி னால் போதிக்கப்பட்டிருந்தனர். இதனால் கிறிஸ்துவுக்கு பின்புகூட அவர்களால் தங்கள் ஊழியங்களை சிறந்த முறையில் செய்ய முடிந்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் தமது ஓட்டத்தை வெற்றியுடன் முடிக்கவேண்டும் என்ற ஒரே வாஞ்சை யுடன் தனக்கு கிறிஸ்து கொடுத்த கடமையை நிறை வேற்றுவதற்காக தன்னை ஒறுத்து செயல்பட்டார். தன் ஜீவியத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து முழு முதல் நோக்கமாக தேவ கட்டளையை நிறைவேற்றி னார். இதைப்போல் நாமும் தேவன் நமக்கு அருளியி ருக்கும் கடமைகளைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டுமாயின், நமது தினசரி வாழ்கையை ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ளதாக அமைத்துக்கொள்ளவேண்டும். அதுவுமின்றி நமது பொறுப்புக்களையும் உத்தரவாதத் தையும் நிறைவேற்ற முடியாது.

**மூன்றாவதாக,** அவர் கூறியது "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்கு தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்"(வசனம் 6) என்பதாகும். இதனை உமது குணாதிசயத்தை வெளிப்படுத்தும்படி யாக என்னை இருதயத்தில் நிர்ணயித்தேன் என்று இரட்சகர் கூறியதாகக் கொள்ளலாம். சத்திய வேதாக மத்தில் "நாமும்" என்பது ஒருவருடைய குணநலங்



# தியான வாழ்க் அவசி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் குறிக்கும். சீஷர்கள் கிறிஸ்துவில் பிதாவைக் கண்டனர். "என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான்" என்று யோவான் எழுதிய சுவிசேஷம் 14:9ல் கிறிஸ்து இயேசு உரைக்கிறார். ஆகவே நம்மைக் காண்பவர்கள் நம்மில் கிறிஸ்வைக் காணும்படியாக நம்மிடையே மாற்றம் ஏற்படுதல் வேண்டும். இவ்வாறு கிறிஸ்து எம்மில் பிரதிபலிக்க வேண்டுமாயின், நாம் அதிக நேரம் அவரோடு தனித்திருக்கவேண்டும்.

கிறிஸ்துவோடு நாம் நெருங்கி ஜீவிக்கும்போது கிறிஸ்துவின் தன்மை நம்மில் பதிகிறது. 40, 50, 60 ஆண்டுகள் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்தவர்களிடம் நெருங்கிய அந்நியோன்னியமும் இசைவும் காணப்படுவது இயல்பு. அவர்கள் இசைந்து இணைந்து வாழ்வதனால் குணாதிசயத்திலும் சாயலிலும் தோற்றத்திலும் கூட ஒன்றியவர்களாக காணப்படுகிறார்கள். இவ்வண்ணமே கிறிஸ்துவோடு நாம் நெருங்கி வாழும்போது, கிறிஸ்துவின் சாயல் நம்மில் பதிகிறது. எனவே நாம் ஆண்டவருடன் நெருங்கி வாழவும் சகவாசம் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பிதாவினிடத்திலிருந்து வந்திருந்தபடியால்தான் நமது ஆண்டவரால் பிதாவை வெளிப்படுத்த முடிந்தது. நாமும் கிறிஸ்து இயேசுவை பிறருக்கு தெரியப்படுத்த வேண்டுமாயின், பல மணிநேரங்களைச் செலவிட்டு, அவரோடு நெருங்கி நம்மையும் அவரைப் போலாக்கிக் கொள்ளவேண்டும்.

நான்காவது, "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவான் 17:14) என்று கிறிஸ்து கூறியதை வாசிக்கிறோம். சீடர்களின் வாழ்வில் வேதாகமமே முக்கிய இடத்தை வகித்தது. இதைப் போல் நமது வாழ்விலும் தேவ வாக்குகள் அடங்கிய வேதாகமம் முக்கிய இடத்தை வகிக்கவேண்டும். எவ்வித அலுவல்களில் ஈடுபட்டிருந்தபோதிலும், வேதப் புத்தகம் படிப்பதில் தவறக்கூடாது. நாம் வேத வாக்கியங்களோடு ஒன்றுபட்டு, அவற்றின் போதனைகளை அறிந்தால்தான் மற்றவர்களுக்கு அதை எடுத்துரைத்து கிறிஸ்துவைப்போல் "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்" என்று கூறமுடியும்.

## கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையை நியமித்திருக்கிறார். அதனை நாம் நன்கு நிறைவேற்ற வேண்டுமானால், நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும். இந்த சத்தியத்தை யோவான் சுவிசேஷம் 15:4ல், திராட்சை கொடியின் உவமையைக் கொண்டு நமது இரட்சகர் விளக்குகிறார். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சைச்செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய் கனிகொடுக்க மாட்டாததுபோல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்." 7ம் வசனத்தில், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று உரைத்திருக்கிறார். இந்த வசனத்திலிருந்து கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் வாழ்க்கை, கனிகொடுக்கும் வாழ்க்கை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய வாழ்க்கை சுத்திகரிக்கப்பட்ட புனித வாழ்க்கை என்பதை "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என அவர் உரைத்ததிலிருந்து அறிகிறோம். சீடர்களின் வாழ்க்கையை சுத்திகரிக்கும் வல்லமை



கையின்
யம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.

கொண்டதாக திருவசனம் விளங்கியது. இதைப்போல நமது வாழ்க்கையும் சுத்திகரிக்கப்படுவதை கர்த்தர் விரும்புகிறார். நாம் ஒழுங்காக வேத வசனங்களை வாசித்து, அதனை ஏற்றுக்கொண்டதற்கு அடையாள மாக, அதன் வழி நடக்கும்போது, சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமடைகிறோம். எனவே அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிவதே நாம் அதை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாகும்.

"உன்னைப்பற்றி அதிக ஜாக்கிரதையுள்ளவனாக இரு" என்று தீமோத்தேயுவுக்கு பவுல் உரைப்பதிலிருந்து நமது சொந்த வாழ்க்கையில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பது புலனாகிறது. சாலொமோனின் உன்னதப்பாட்டில் "என்னை திராட்சத் தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள். என் சொந்தத் திராட்சத் தோட்டத்தை நான் காக்கவில்லை" என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப்போல் திராட்சத் தோட்டம் போன்ற நமது சொந்த வாழ்க்கையை நாம் அசட்டை செய்யக்கூடாது. நம்மை சுத்தமாக வைத்திரா விட்டால் நமது இளைய சந்ததியினரை சுத்திகரிக்கும் பொறுப்பை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அவர் நமக்குத் தந்துள்ள பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுவதற்கு, முதலாவதாக நமது திராட்சத் தோட்டத்தையே நாம் நன்கு கவனித்திருக்க வேண்டும். நமது சொந்த ஜீவியம் எவ்வாறு இருக்கிறது?

கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மாத்திரமே நாம் மற்றவர்களை வழிநடத்தமுடியும். இதற்கு விடையாகத்தான் யோவான் 6:57-58ல், "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே" என ஜீவ அப்பம் பற்றி இரட்சகர் கூறி இருக்கிறார். கர்த்தராகிய கிறிஸ்து தம்மை ஜீவ அப்பம் என்றும் அதனை உண்ணவேண்டும் என்றும் யோவான் 6:63ல் தன்னை வார்த்தைக்கு ஒப்பிட்டு "நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றும் உரைக்கிறார். ஜீவ அப்பமாகிய ஜீவவசனங்களை உட்கொள்ளுகிறவன் கிறிஸ்தவ ஜீவியத்தில் முன்னேறுகிறான் என்பதை உணரவேண்டும்.

இவ்வாறு ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் முன்னேற்றம் அடைந்தாலன்றி பிறரை முன்னேற்ற முடியாது. இருக்கும் நிலைமைக்கு மேலாக ஒருவரையும் உயர்த்த முடியாதாகையால், வெறும் பிரசங்கங்களால் அல்ல, ஆவிக்குரிய அனுபவங்களால் உயர்ந்த நிலையை அடையவேண்டும். நாம் உயர்ந்த நிலையை அடைந்தால்தான், மற்றவர்களையும் நம் நிலைக்கு உயர்த்த முடியும்.

குறிப்பிட்ட விதமாக நாம் வாழ்ந்து சிறந்த ஊழியம் செய்யப்போவதாக தேவ சந்நிதானத்தில் பொருத்தனை செய்வதால் மட்டும் எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. நமது ஜீவியத்தில் கர்த்தரோடு நாம் கொண்டுள்ள உறவு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதைப் பலப்படுத்துவதற்காக தேவ வசனத்தை படிப்பதில் அதிக நேரம் செலவிடவேண்டும். நமது வாழ்வில் உள்ள ஏனைய காரியங்களைவிட இது அதி முக்கியமான காரியமாகும்.

ஒருவரது ஆவிக்குரிய வளர்ச்சியை அவரது செய்கைகளைக் கொண்டல்ல, அவர் கர்த்தரோடுள்ள உறவைக்கொண்டே அறியவேண்டும். பொருளாசையும் உலக சிநேகமும் பெருகிவரும் தற்காலத்தில் மனிதன் அவனது நற்செய்கைகளைக்கொண்டே அளக்கப்படுகிறான். உதாரணமாக ஒரு பிரசங்கியை அறிமுகம்செய்யும்போது அவரது நற்செய்கைகளே விளம்பரப்படுத்தப் படுகின்றன. அதன்படியே அவர் மதிப்பிடப்படுகிறார். ஆனால், சங்கீதக்காரனின் மதிப்பீடு முற்றிலும் மாறுபட்டது என்பதை சங்கீதம் 1:2,3லிருந்து அறியலாம். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என பாக்கியவான் மதிப்பிடப் படுகிறான். பெரிய பழத்தோட்டங்களையும் திராட்சத் தோட்டங்களையும் கொண்டிருந்தாலும், கனியில்லாமல் இலைகள் மட்டும் இருந்தால் அதனால் பலனில்லை.

கனி கொடுத்தல் என்றால் என்ன? இதைப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவான் சுவிசேஷம் 15ம் அதிகாரம் விளக்கமாக உணர்த்துகிறது. அதன்படி நாம் தேவ வார்த்தையை தியானித்து அதற்குக் கீழ்படியும்போது, நதியருகே நாட்டப்பட்டுள்ள மரம்போல் வளம் கொழித்து, பருவ காலத்திற்கேற்ப கனி கொடுப்போம். இது கர்த்தருடைய ஆச்சரியமான வாக்குதத்தமாகும். கர்த்தரின் வாக்கு ஒருபோதும் தவறிப்போவதில்லை.

## தகுதியாகுதல்

நாம் தேவ ஊழியம் செய்ய தகுதியுள்ளவர்கள் தானா? நம்மை நாமே ஆராய்ந்து அறிந்து கொள்வதன் மூலம் அதற்கு விடை காணமுடியும். தேவ ஊழியம் செய்வதற்கு மனிதன் தரும் பட்டங்களையும், தகுதி களையும் விடுத்து, தேவன் கூறுகிறபடி தகுதியடைய வேண்டும். மனிதர் அளிக்கும் பயிற்சிகளும் பட்டங்க ளும் ஓரளவு பயன் தந்தாலும், தேவன் அளிக்கும் தகுதி களே அதிமுக்கியமானவைகள்.

தேவன் எவ்விதமாக தமது ஊழியத்தைத் தேர்ந்தெடுத்தார் என்பதை 1கொரிந்தியர் 1:26-29ல் அறியலாம். "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின் படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகர் இல்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட் கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவை களைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட் கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவை களை தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக் கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவ னுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்." உலகம் செய்வதிலிருந்தும் முற்றிலும் முரண்பாடான வழியையே தேவன் உபயோகிக்கிறார் என்று பார்க்கிறோம்.

மேற்குறிப்பிட்ட சத்தியத்தைக்குறித்து சிறிது சிந்திப்போமானால் உலகமோ, ஏனைய கிறிஸ்தவர் களோ தரும் அங்கீகாரத்தைக் குறித்து கவலையடைய தேவையில்லை. நமது ஒன்றுமில்லாமையை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் மனிதரின் பாராட்டுகளை தேட மாட்டோம். நமது தியான வாழ்க்கையே நாம் தேவனோடு சரியான உறவுகொள்ள உதவி செய்யும்.

நாம் தேவனால் தகுதிபெற்று உபயோகப்படுத் தப்படும்போது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அதிசயமான முறையில் நம்மிடம் நிறைவேற்றப்படுகின்

**கொடியானது தானாய் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்.**

றன. "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியி லுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங் கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோசெயர் 3:1-3).

இவ்வண்ணம் மேலானவைகளைத் தேடும் எண்ணத்தால் நமது உள்ளம் நிறைந்திருக்குமானால், அவரது வாக்குதத்தங்கள் யாவும் நிறைவேறுகின்றன. "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைக ளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங் களை அழித்துப்போடுங்கள்" (கொலோ 3:5) என்ற வித மாக தேவனுக்கு முன்பாக இவைகளை அழித்துப்போட நாம் கடமைப்பட்டுள்ளோம். இவைகளை அழித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நாம் தரித்துக்கொள்ள வேண்டும்.

நம்மை தேவன் ஆட்கொள்ளாதவாறு தடை யாக இருக்கின்ற காரியங்களை அழித்து, கர்த்தர் நம் மூலமாக கிரியை செய்யும்படி நம்மை அர்ப்பணிக்க வேண்டும். எனது வாழ்க்கையில் தேவனுக்கே முழு சுயாதீனமும் பூரண ஆளுகையும் இருத்தல் வேண்டு மென்று நிரந்தரமான தீர்மானம் தேவை. தேவனின் விருப்பங்கள் அன்பு, ஜீவன் ஆகியவை நம் மூலமாக நிறைவேற்றவும், வெளிப்படவும், அவரது நித்திய அன்பு நம்மில் பூரணமாகப் பெருகவும் நாம் வைராக்கிய வாஞ்சை கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நாம் செவ்வையான, ஆழமான தியான வாழ்க்கையில் ஈடு பட்டு தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சமாரியன்

கவி. சுசி பிரபாகரதாஸ்

நல்ல சமாரியனின் உவமையை நாம் அனைவரும் அறிவோம். இந்த உவமையை ஆண்டவர் பல்வேறு காரணத்திற்காக கூறினார்.

இயேசுவை சுற்றியிருந்த மக்களில் அநேகர் அவரது வார்த்தையை வாஞ்சையோடு கேட்டுக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு நியாயசாஸ்திரி அங்கு வருகிறார். நியாயப் பிரமாணத்தை நன்கு கற்றவர்கள்தான் நியாய சாஸ்திரிகள். கற்றது மட்டுமல்ல, அதை கைக்கொள்ளுகிறவர்களுமாய் இருந்தார்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்திலே எழும்புகிற கேள்விக்கெல்லாம் சரியான விளக்கம் தருவார்கள். இப்படிப்பட்ட நியாய சாஸ்திரிகளில் ஒருவன் எழுந்து ஆண்டவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார். அவன் கேட்டதின் நோக்கம், தான் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதல்ல. இயேசுவை சோதிப்பதற்காகவே அந்த கேள்வியைக் கேட்டான். "போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார். அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்" (லூக்.10:25-27). உடனே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த நியாயசாஸ்திரியைப் பார்த்து: "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்" (லூக்கா 10:28).

இந்த மனிதன் தன்னை நீதிமானாக காட்டிக்கொள்ள மறுபடியும் ஒரு கேள்வி கேட்கிறான்: "ஆண்டவரே, எனக்குப் பிறன் யார்" அப்பொழுதுதான் ஆண்டவர், இந்த உவமையைச் சொன்னார். யூதர்கள், யூத தலைவர்கள், மார்க்க தலைவர்கள், நியாய சாஸ்திரிகள், பரிசேயர்கள், சதுசேயர்கள், வேதபாரகர்களுக்கெல்லாம், யூதர்களுக்கு பிறன் யூதன்தான் என்பதே எண்ணமாயிருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த மனிதர்களிடம் சொன்னது என்ன? "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றார்" (லூக்கா 10:27).

நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது? தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் செல்லவேண்டுமென்றால் தேவன்மீது அன்புகூரவேண்டும், மனிதர் மீது அன்புகூரவேண்டும். மனிதன் அன்புகூருவது நியாயப்பிரமாணத்தின் போதனையாகும். உன்னிடத்திலே அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும். நாம் என்ன நினைக்கிறோம்? பிறன் என்றவுடன் பக்கத்திலிருக்கிறவன், நமது குடும்பத்தார், நமது சபையார் என்று எண்ணிக்கொள்கிறோம். யூதனுக்கு பிறன் யூதன் என்ற பாரம்பரிய எண்ணத்தை உடையவர்களாயிருந்தனர். ஆனால் ஆண்டவர் அந்த சிந்தையை தகர்க்க விரும்புகிறார். யூதனுக்கு பிறன் யூதனல்ல, ஏனென்றால் ஆண்டவர் வாழ்ந்த காலத்திலே யூதர்கள் சமாரியர்கள் ஆகிய இரண்டு பேருக்கும் இனப் பிரச்சனை ஏற்பட்டு இருந்தது. யூதர்கள் தங்களை உயர் குலத்தவர்களாகவும், சமாரியர்களை தாழ்ந்த மக்களாகவும் எண்ணிக்கொண்டிருந்தனர். சமாரிய பெண்ணிடம் போய் இயேசுவானவர் தண்ணீர் கேட்டபோது நீர் யூதனாய் இருக்க சமாரிய பெண்ணிடம் தண்ணீர் கேட்கலாமா என்று வினவியதின் காரணம் என்ன? அந்நாட்களில் இனப்பிரச்சனை தலைவிரித்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடின காலம். ஆனால் நமது ஆண்டவர் ஒருநாளும் இனப்பிரச்சனைகளுக்கு ஆதரவு கொடுப்பவர் அல்ல.

இந்த நல்ல சமாரியனின் உவமையை சொல்வதின் நோக்கம் என்ன தெரியுமா? யூதனுக்கு பிறன் யூதனல்ல, யூதனுக்கு பிறன் தன் இனத்தான் அல்ல. யூதனுக்கு பிறன் யார் என்றால் இவர்கள் யாரை வெறுத்துக்கொண்டு இருக்கிறார்களோ அவர்கள்தான் பிறன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இந்த நியாய சாஸ்திரிபோல உன்னுடைய பிறன் யாரென்றால் உன் தம்பி, இனத்தான், சபையார் என நீ எண்ணிக்கொண்டு இருக்கலாம். உண்மையான பிறன் யார் தெரியுமா? தேவை நிறைந்தவர்கள்தான். இதற்காகவே ஆண்டவர் இந்த நல்ல சமாரியனுடைய உவமையைச் சொன்னார்.

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்போது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்திற்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான்.

பின் சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனது காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய் அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால் நான் திரும்பி வரும் போது அதை உனக்கு தருவேன் என்றான் (லூக்.10:30-37). இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்?

முதலாவதாக தேவையுள்ளவன்தான் நமக்கு பிறன். இரண்டாவதாக நமக்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்கள்தான் உண்மையாக பிறனாக காணப்படுகிறார்கள். ஆசாரியன், லேவியர் இரண்டு பேருமே மார்க்க தலைவர்கள். யூதசமயத்திலே உயர்ந்த பதவிகளை உடையவர்கள், ஆராதனை நடத்துகிறவர்கள், வேதத்தை வியாக்கியானம் செய்கிறவர்கள், தங்கள் மார்க்க பாரம்பரியங்களிலே ஜாக்கிரதையுள்ள மக்கள். இந்த ஆசாரியனும், லேவியனும் போகிறார்கள். இந்த இரண்டுபேரும் குற்றுயிராக கிடக்கிற மனிதனைக்கண்டு விலகிப் போனார்கள். பிறகு சமாரியன் ஒருவன் வருகிறான். இந்த உவமையிலே, காயப்பட்டவன் சமாரியன் என்று ஆண்டவர் சொல்லவில்லை. ஒருவன் காயப்பட்டு குற்றுயிராக இருக்கிற யூதன், இன்னொருவன் ஒரு ஆசாரியன், இன்னொருவன் லேவியன், இன்னொருவன் சமாரியன். இதில் மூன்று குறிப்புகளை காணலாம்.

தங்களது ஆன்மீக வாழ்க்கையிலே எது முக்கியம் என்பதை ஆசாரியனும், லேவியனும் உணராமல் போனார்கள். ஆண்டவரில் அன்புகூர்ந்து நம்மில் அன்பு கூருவதுபோல பிறனிலும் அன்புகூரவேண்டும் என்பதே நமது ஆன்மீக வாழ்க்கையிலே முக்கியமானதாகும். இதுதான் நியாயப்பிரமாணமும்கூட. இந்த ஆசாரியனும், லேவியனும் ஆண்டவரில் முழுமையாக அன்புகூர்ந்தார்கள், முழு மனதோடு நேசித்தார்கள். ஆனால் தங்களை நேசித்ததைப்போல காயப்பட்ட அவன்மேலே அன்பு கூராமல் போனார்கள். ஆசாரியன் லேவியன் இருவரும் வாழ்க்கையில் எது பிரதானம், எது அவசியம் என்பதை உணராமல் போனார்கள். குற்றுயிராய் கிடக்கிற மனிதனுக்கு உதவிசெய்வதும், தேவையுள்ள மனிதனுக்கு உதவிசெய்வதும் ஒருவகையில் தேவனை ஆராதிப்பதாகும் என்பதை உணரவில்லை. தேவனுக்கு செய்கிற ஊழியத்திலே அதுவும் ஒன்று என்பதை உணராமல் போனார்கள். அவர்கள் தங்கள் மார்க்கப் பாரம்பரியத்தையும், தங்களது கடமைகளையும் முக்கியப்படுத்தினார்களேயொழிய உதவி செய்வதற்கு மறுத்தார்கள்.

இறந்துபோனவரை தொட்டால் அவர்கள் தீட்டுபட்டவர்கள் ஆவர். இவன் குற்றுயிராய் கிடக்கிறான். இவனை தொடுவதினால் தீட்டுப்பட்டால் ஒதுங்கி, தங்கள் சுத்திகரிப்புக்கு சில நாட்களை செலவுபண்ண வேண்டும். இதனால் அநேக சங்கடங்கள், எதிர்கால விளைவுகள் வரும் என எண்ணி அவர்கள் ஒதுங்கி போயிருக்கலாம். ஆனால் வாழ்க்கையிலே எது பிரதானம் என்பதை உணராமல் போனார்கள்.

முதலாவதாக வாழ்க்கையின் கடமைகள், ஆராதனை முறைகள், மார்க்க தன்மைகள் அவர்களை நன்மைசெய்யமுடியாதபடி கட்டிப்போட்டது. உதாரணமாக, இரண்டுபேர் வேகமாக ஆராதனைக்கு செல்கின்றனர் என வைத்துக்கொள்வோம். குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாக போகவேண்டும்; குற்றுயிராக கிடக்கிற மனிதனை தூக்கி எடுத்து அவனை பாதுகாத்து சத்திரத்தில் சேர்க்கிறதற்குள்ளாக எத்தனையோ தடங்கல்கள் ஏற்படும். இதனால் அவர்கள் உதவி செய்யாமல் சென்றிருக்கலாம். சிலசமயங்களில் நமது கடமைகள், நமது மார்க்க பாரம்பரியங்கள், ஆராதனையின் சூழ்நிலைகள் நாம் அநேக நன்மைகளை செய்யமுடியாதபடி தடுத்து விடுகின்றன. கர்த்தருடன் சீஷத்துவ வாழ்க்கை வாழும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பொழுது நான் விளையாட வேண்டிய பருவம்





இது நான் உலகத்தை அனுபவிக்க வேண்டிய இளமை பருவம்



அப்பாடா! இப்பதான் ஒருமாதிரி கலியாணம் முடிஞ்சுது. பிலீஸ் டிஸ்டர்ப் (Disturb) பண்ணாதீர்கள்

சாப்பிடவே நேரமில்லை நிறைய சம்பாதிக்கணும் நாலு பேர் மதிக்க வேணாமா?





தவறான வழிகளில் நடந்து, என் வாழ்க்கை கவலைக்குறியதாய் மாறிவிட்டதே

வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரே?





Too late
என் காலம் கடந்து விட்டது
இனி பயன் ஒன்றுமில்லை

# நீ சிந்தித்து செயல்படு!

உன் வாழ்க்கையிலே உன்னுடைய மார்க்க அறநெறி கோட்பாடுகள்கூட, உன் பாரம்பரிய பழக்கங்கள்கூட, ஆராதனைக்குரிய முறைமைகள்கூட அநேக நன்மைகளை செய்யாதபடி தடுத்துபோடுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. அதை மேற்கொள்ள அழைக்கப்படுகிறாய்.

இரண்டாவதாக, இந்த மனிதர்கள் இந்த ஆசாரியனும், லேவியனும் ஆண்டவருக்கு சேவைசெய்யக்கூடிய வாய்ப்பை இழந்துபோனார்கள். ஆண்டவர் ஒருமுறை இவ்வாறு சொன்னார்: நான் பட்டினியாயிருந்தேன். எனக்கு ஆகாரம் கொடுத்தீர்கள், நான் வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், நான் அந்நியனாயிருந்தேன் என்னை சேர்த்துக்கொண்டீர்கள் என்று சொன்னார். அப்பொழுது அந்த ஜனங்கள்: 'நீர் எப்பொழுது ஐயா இந்த நிலையில் இருந்தீர்.' உடனே ஆண்டவர் சொன்னார்: 'மிகவும் சிறியவராகிய என் சகோதரரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' (மத்.25:40) தேவையுள்ள மனிதர்களுக்கு நாம் செய்கிற உதவி, ஆபத்தில் சிக்குண்ட மக்களுக்கு நாம் செய்யக்கூடிய உதவி அது ஆண்டவருக்கே செய்கிற உதவி. ஆண்டவர் மனிதர்களை தம் சாயலாக படைத்தார். தமது சாயலாக படைத்த மனுக்குலத்திற்கு செய்கிற உதவியானது ஆண்டவருக்கே செய்கிற உதவி என்பதையும் அதுவே வாழ்க்கையிலே பிரதானம் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. கடமைகள், மத பாரம்பரியங்கள், ஆராதனைமுறைகள் தங்களை நன்மை செய்யாதபடி தடுக்கிறது என்பதை உணரவில்லை.

மூன்றாவதாக மனிதருக்கு உதவி செய்வதின் மூலம் ஆண்டவரை சேவிக்கிறோம், அவருக்கு மகிமை கொண்டுவருகிறோம் என்பதை உணராது போனார்கள். பெரிய ஒரு நல்ல வாய்ப்பை இழந்துபோனார்கள். அந்த மனிதனுக்கு பிறன் தாமே என்பதை காண்பிக்கக்கூடிய அந்த சிலாக்கியத்தை இழந்துபோனார்கள். ஏழைக்கு நாம் செய்கிற உதவியும், ஏழைக்கு இரங்குவதும் கர்த்தருக்கு கடன் கொடுப்பதாகும். நீ கொடுத்தால் அதை தேவன் திரும்பக் கொடுப்பார். நாம் மனிதர்களுக்கு செய்யக்கூடிய உதவியை நாம் செய்யாமல் போனால் நாம் தடுமாறினவர்களாயிருப்போம். அநேக சமயங்களிலே பரவசத்திலே வாழ்கிறோம். ஆவிக்குரிய வரங்களிலே வளர பிரயாசப்படுகிறோம். ஆனால் அடிப்படை உண்மை என்னவென்றால், 'பிறருக்கு உதவி செய்வதை, நன்மை செய்வதை மறந்துவிட்டால்' அது தேவபிரமாணத்தை மீறுவதற்கு சமமாகும். இதைத்தான் அந்த நியாயசாஸ்திரிக்கு உணர்த்துவதற்காக சொன்னார். தேவையுள்ள மக்களுக்கு உதவி செய்வதுதான் பிரமாணத்தைக் கைக்கொள்வதாகும். நாம் பிறருக்கு சேவை செய்வோம், நன்மை செய்வோம். அதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவருக்கு நாம் செய்கிற புத்தியுள்ள ஆராதனை என்பதை புரிந்து கொள்வோம்.

மேலும் இந்த உவமையிலே ஆண்டவர் கற்றுக் கொடுக்கிற போதனை என்னவென்றால், அன்பு. உண்மையான அன்பு என்றால் என்ன? உண்மையான அன்பைக்குறித்து கேள்வி கேட்ட நியாய சாஸ்திரிக்கு ஆண்டவர் சரியான பதிலைக் கொடுக்கிறார், சரியான விதத்திலே அந்த அன்பை விளக்குகிறார். லூக்.10:37ல் அதற்கு அவன், 'இரக்கம் செய்தவனே' என்றான். இயேசு அவனை நோக்கி, 'நீயும் போய் அந்தப்படியே செய்' என்றார். தேவையுள்ளவர்களுக்கு இரக்கம் பாராட்டி உதவி செய்வதே அன்பு. இதைதான் நாம் இவ் உவமையிலே கற்றுக்கொள்கிறோம். பிரமாணத்தைப் பார்த்தால் அன்பை இவ்வாறு மூன்றாக பிரிக்கலாம்.

1. *தேவன்மேல்* உள்ள ***அன்பு.***
2. *நம்மேல்* உள்ள ***அன்பு.***
3. *பிறர்மேல்* உள்ள ***அன்பு.***

தேவனிடத்தில் எப்படி அன்புகூரவேண்டும்? முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு சிந்தையோடும், முழு பலத்தோடும் அன்புகூரவேண்டும். இதன் பொருள் என்னவென்றால் முழுமையாய் நாம் தேவனிடத்தில் அன்புகூரவேண்டும். ஆண்டவரிடத்தில் காட்டுகிற அன்பைக் காட்டிலும் வேறு எவரிடத்திலும் காட்டக்கூடாது. நாம் எல்லாரையும் நேசிக்கலாம், அன்புகூரலாம் மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள் மீது நாம் அன்புகூரலாம். இதைக் காட்டிலும் தேவன் மேல் வைக்கிற அன்பு உயர்ந்ததாக, கனமுள்ளதாக காணப்பட வேண்டும்.

இரண்டாவது நாம் நம்மில் அன்புகூரவேண்டும். நாம் நம்மில் அன்புகூருவது தவறு என்றும், சுயநலம் என்றும் நம்மில் அநேகர் சொல்லுவதுண்டு. ஆனால் ஆண்டவர் இவ்வாறு சொன்னார்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல என்று. நாம் நம்மில் எப்படி அன்பு கூரவேண்டுமென்றால் தேவ அன்பின் அடிப்படையில் நாம் நம்மில் அன்புகூர வேண்டும். நாம் நம்மில் அன்பு கூரவில்லை என்றால் எப்படி பிறர்மீது அன்புகூரமுடியும்.

நல்ல சமாரியன் உவமையின் மூலம் நாம் கற்றுக்கொள்கிற உண்மையென்ன? தேவையுள்ளவர் களுக்கு உதவுவதே உண்மையான அன்பாகும். ஆண்டவர் கேட்டார்: இந்த மனிதனுக்கு யார் பிறன்? அவனுக்கு இரக்கம் செய்தவனே என்று உடனே நியாய சாஸ்திரி சொல்கிறான். அன்பை இரக்கத்தின்வாயிலாக வெளிப்படுத்துகிறவனே அன்புள்ளவன். யூதனுக்கு யூதன் பிறன் அல்ல, யூதன் கடுமையாக விரோதிக்கிற அந்த சமாரியன்தான் அன்புக்காக ஏங்குகிறவன். அந்த சமாரியன்தான் பிறன் என்று சொல்லுகிறார்.

நீ வாழ்கிற குடும்பத்திலே, சமுதாயத்திலே, உன் ஆராதிக்கும் இடத்திலே எத்தனையோ பேர் இரக்கத்திற்காக ஏங்குகிறார்கள். உதவிசெய்யமாட்டார் களா, அன்பு செலுத்தமாட்டார்களா என்று தவிக்கிறவர் கள் அநேகர். அப்படிப்பட்ட மக்களுக்கு நாம் இரக்கம் பாராட்டுவதுதான் உண்மையான அன்பு.

நாம் மனிதர்களிடம் அன்புகூராவிட்டால், நாம் தேவனிடத்தில் அன்புகூரமுடியாது. தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தேவ சாயலாய் படைக்கப்பட்ட மனிதர்களிடம் அன்புகூருவான். ஒருவன் தன் சொந்த சகோதரனிடம் அன்புகூராவிட்டால் தான் காணாத தேவ னிடம் எப்படி அன்புகூருவான். காண்கிற சகோதரனிடம் அன்புகூருகிறவன்தான் காணாத தேவனிடமும் அன்பு கூருவான். இரக்கம் செய்வது தான் உண்மையான அன்பாகும்.

ஆண்டவரின் சாயலாய் படைக்கப்பட்ட மனிதர் களிடம் அன்புகூருவதே உண்மையான அன்பாகும். அன்பில் ஜாதியோ, மொழியோ, தேசமோ ஆகிய இவைகளை சார்ந்திருந்து அன்புகூருவதை மட்டுப்படுத் தக்கூடாது. எல்லா மரபுகளையும் தாண்டி அன்புகூரு வதுதான் தேவ அன்பாகும். ஆண்டவர் இந்த போதனை யைச் சொல்லிவிட்டு, இதை அறிந்துகொண்ட நீ அந்தப் படியே செய் என்றார். சத்தியத்தை, இரக்கம் செய்யும் ஆலோசனையைப் புரிந்துகொண்ட நாம், கேட்டவர்க ளாய் மட்டுமில்லாமல் அப்படியே செய்கிறவர்களாய் மாறுவோம்.

உண்மையான அன்பு எது என்று புரிந்து கொண்ட நாம் இரக்கத்தின் அடிப்படையிலே செயல் படுத்தவும், நம் வாழ்க்கையிலே செயல்படும்படியும் அழைக்கிறார். நீயும் போய் அந்தப்படியே செய். கேட் கிறவர்களாய் மாத்திரமல்ல, செய்கிறவர்களாய் மாற வேண்டும் என்று ஆண்டவர் கற்றுக்கொடுக்கிறார். என் வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்கிறவனெவனோ அவன் கற்பாறையின் மேல் கட்டின மனிதன் என்று சொல்கிறார். இந்த சமாரியன் தன் இனத்தானல்ல, ஆனாலும் அவன்மேல் அன்புகூர்ந்தான், மனதுருகி னான். மரபுகளை தாண்டி அன்புகூருகிறவன் தன்னிடத் தில் உள்ளதை அவனுக்கு பகிர்ந்துகொடுத்தான். தன் வாகனத்தில் ஏற்றி சத்திரத்திலே சேர்த்து அவனுக்கு செய்யவேண்டிய எல்லா காரியத்தையும் செய்துவிட்டு கடந்துபோனான். இதுவே உண்மையான அன்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேதனையும் சாதனையும்

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார்

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும், நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். ஸ்திரியானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள், பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். (யோவான் 16:20,21)

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் என்ற வசனம் இன்றைய நாட்களில் அநேக சுவிசேஷ கூட்டங்களில் பிரசங்கிக்கப்படுகின்றது. 'உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்' என்று சொன்ன இயேசு, அந்த துக்கம் எப்படி சந்தோஷமாக மாறும் என்பதையும் எடுத்துக்கூறத் தவறவில்லை. இன்றைய சுவிசேஷ உலகத்தில் தாராளமாய் நடக்கின்ற காரியம், நமக்குத் தேவையானவைகளை எடுத்துக்கொண்டு, மீதமானவைகளைத் தள்ளிவிடுவதே.

'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை' என்ற வசனத்தை ஏறக்குறைய எல்லாருடைய வீடுகளிலும் நாம் காணமுடியும், ஆனால், 'நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய், போதுமென்றிருங்கள்' என்ற வசனத்தை நாம் மறந்துவிடுகின்றோம். நாம் பண ஆசையில்லாதவர்களாய் போதுமென்ற மனதுடன் இருக்கும்போது, அவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை நம்மைக் கைவிடுவதுமில்லை என்பதே அந்த வசனத்தின் முழுமையான அர்த்தம். ஆனால், நமக்கோ மேலேயுள்ள வேத வார்த்தைகள் பிடிக்காததினாலேயே கீழே உள்ளவற்றை மட்டும் எடுத்துக்கொள்கிறோம்.

இதைப்போலவே 'நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.' (மத்தேயு 28:19,20) என்ற வசனத்திலும் 'இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு, முன்னாக நிற்கிற இயேசுவின் கட்டளைகளை நாம் மறந்து விடுகின்றோம். நமக்கு எப்போதுமே நல்ல பகுதிகள் மட்டும் தான் வேண்டும்.

மீன் சாப்பிடும்போது முள்ளை எடுத்துவிட்டு சதையை மட்டும் சாப்பிடுவதைப்போலவே நாம் வசனத்தையும் சாப்பிடுகிறோம். நமக்குத் தேவையான, சாதகமான மற்றும் ஆசீர்வாதமானவைகளை எடுத்துக்கொண்டு மற்றவற்றை விட்டுவிடுகின்றோம்.

## புதியவை உருவாக புடமிடப்படுவோம்!

'உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்' என்று சொன்ன இயேசு ஒரு கர்ப்ப வேதனைப்படுகின்ற ஸ்திரியையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கர்ப்ப வேதனை எல்லா ஸ்திரிகளுக்கும் நியமிக்கப்பட்ட ஒன்று. எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், எப்படிப்பட்ட உடல்நிலையில் இருந்தாலும் சரி கர்ப்ப வேதனையை பெண்கள் அனுபவித்தே பிள்ளையை உலகில் பெற்றெடுத்தாக வேண்டியுள்ளது. இதற்குத் தப்பிச்செல்ல வேறெந்த வழியில்லை.

ஏதேனில், தேவ கட்டளைகளை மீறிய ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தண்டனை அளித்தபோது, ஆதாமை நோக்கி: "நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்ததினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்" எனவும் ஏவாளை நோக்கி: "நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" ஆதி 3:16 எனவும் கூறினார். முதல் தாயாம் ஏவாளுக்கு அன்று தேவன் கொடுத்த தண்டனையையே இன்று பூமியிலுள்ள எல்லா பெண்களும் அனுபவித்து வருகின்றார்கள்.

புதிய காரியம் உருவாகவேண்டுமென்றால் வேதனையை நாம் சகித்தேயாக வேண்டும். நமது குடும்பமானாலும் சரி, ஊழியமானாலும் சரி புதியதொரு காரியம் உருவாகும்போது வேதனைகளுக்கு நாம் விலகியோடக்கூடாது. இன்றைய நாட்களில் ஜனங்களின் விருப்பமெல்லாம் வேதனையில்லாமல் அவர்களுடைய வாழ்க்கையில் எல்லாம் நடக்கவேண்டும் என்பதே. நான் சிறுவனாயிருந்தபோது மருத்துவமனைகளில் 1000 ல் ஒரு நபருக்குத்தான் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுப்பார்கள். ஆனால் இப்போதோ 1000 ல் ஒரு நபருக்குத்தான் இயற்கையான பிரசவம் நடக்கிறது, மற்றவர்களுக்கெல்லாம் அறுவை சிகிச்சைதான். அறுவை சிகிச்சை செய்துகொண்டாலும் கூட பிரசவ வேதனையை ஸ்திரிகள் அனுபவித்தேயாகவேண்டும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரசவவேதனை ஸ்திரிகளுக்காக வைக்கப்பட்டதே.

புதிதாக ஒன்றை நாம் பெறவேண்டுமென்றால் வேதனையின் வழியாக நாம் கடந்து செல்லவேண்டிய அவசியமும் உண்டு. ஊழியத்தின் பாதையில் நாம் வேதனையையோ, நெருக்கத்தையோ அனுபவிப்போமென்றால் புதிதாக ஒரு காரியம் உண்டாகப்போகிறது என்றே அர்த்தம்.

குடும்ப வாழ்க்கையிலோ அல்லது தொழில் துறைகளிலோ நாம் வேதனைகளை அனுபவிக்கும்போதும் இந்த சத்தியத்தை



உணரத் தவறக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் வேதனை உண்டாகும்போது, புதிதாக ஒன்று உண்டாகப்போகின்றது என்ற நம்பிக்கையே நம்மில் உருவாகவேண்டும்.

நமது தேசத்திலே தேவன் புதிய காரியத்தைச் செய்வதற்காக தன் சபை நெருக்கப்படலாம், ஒடுக்கப்படலாம், பற்பல நிலைகளில் துக்கங்களையும் துன்பங்களையும் சந்திக்கலாம், உபத்திரவத்தின் பாதையில் திருச்சபை கடந்துசெல்லலாம். இவை எல்லாம் புதிய காரியங்களை உருவாக்க தேவன் அனுமதிப்பவைகளே. திருச்சபை இந்த காரியங்களைக் கடந்துசெல்லும்போது தேவன் புதிய காரியங்களை உருவாக்குவார். "Where there is no pain, there is no gain".

வேதனையில்லாமல் வாழ்க்கை இல்லை என்று நாம் கற்றுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடுக்கப்படாதபடியினாலேயே எங்கேயாவது போய் யாரையாவது தலையில் கைவைத்து வேதனையில்லாமல் எதையாகிலும் செய்துவிடுவார்களா என்று நாம் தினமும் துடிக்கிறோம். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறவேண்டும் என்றால் நாம் வேதனை துன்பத்தை அனுபவித்தேயாக வேண்டும். இதை நாம் ஒருக்காலும் மாற்ற இயலாது.

## சபை ஆளுவோரை பிறப்பிக்கட்டும்

கர்த்தாவே, பேறுகாலம் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டு, தன் அம்பாயத்தில் கூப்பிடுகிற கர்ப்பவதியைப்போல, உமக்கு முன்பாக இருக்கிறோம். நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறோம், தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்ய மாட்டாதிருக்கிறோம், பூச்சக்கரத்துக் குடிகள் விழுகிறதுமில்லை(ஏசா 26:17,18). பாடுபட்டும், வேதனைப்பட்டும் காற்றையே பெற்றெடுத்த ஸ்திரியைப்போலவே நாங்கள் இருக்கின்றோம் என்று தேவனிடத்தில் முறையிடுகின்ற ஒரு கூட்டத்தாரை இந்த வசனங்களில் நாம் காணமுடியும். இன்றைக்கு திருச்சபையில் நடக்கின்ற காரியமும் இதுதான்.

அநேக சபைகள் ஆளுகிறவர்களைப் பிறப்பிப்பதற்குப் பதிலாக காற்றையே பெற்றெடுத்துக் கொண்டிருக்கின்றன. நாம் பாடுபட்டால் மாத்திரம் போதாது, ஆளுகிறவர்களையும் பெற்றெடுக்கவேண்டும். இருப்புக்கோலால் உலகத்தை ஆளுகிற ஆண்பிள்ளைகளை பெறவேண்டிய சபை, உலகத்தை ஆள்பவர்களை உருவாக்கவேண்டிய அநேக சபைகள் இன்றைய நாட்களில் காற்றைப் பெற்றுக்கொண்டிருப்பது வேதனையான காரியமே. திருச்சபை இருப்புக்கோலால் ஆளுகிறவர்களை உருவாக்க வேண்டும், காற்றைப் பெற்றவர்களைப்போல திருச்சபை காட்சியளிக்கக்கூடாது. இந்த நாள் நெருக்கமும், கண்டிதமும், தூஷணமும் அநுபவிக்கிற நாள் பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலன் இல்லை. (ஏசாயா 37:3)


இயேசுவைப் போலவே இவ்வுலகத்தின் இருளை அகற்றுவதற்கும், இந்த உலகத்தை ஆளுவதற்குமே நாம் பிறந்திருக்கிறோம். இருளை அகற்ற ஒரு மெழுகுவர்த்தி போதுமானது, ஆனால், அந்த மெழுகுவர்த்தி தன்னை அழித்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும். ஒரு மனிதனை திருச்சபை உருவாக்கினாலும் அவனை எரியவைத்து, உருகவைத்து, வெளிச்சங் கொடுக்க வைத்து இந்த உலகத்தினுள் அனுப்புமானால் இந்த உலகத்தின் இருளை திருச்சபை அகற்றிவிடமுடியும். அநேக சபைகளுக்கு இந்த வாஞ்சை உண்டு, கதறுகிறார்கள், துடிக்கிறார்கள் ஆனால் பெறவோ அவர்களுக்கு பெலனில்லை.

இன்றைய நாட்களில் உலகத்தின் பெரிய இருளை அகற்றுவதற்கு ஒரு மெழுகுவர்த்திக்கு பெலன் போதாதுதான். ஆனால் தன்னை அழிக்க அது ஆயத்தமாயிருக்குமானால் இவ்விருளை அகற்ற அம்மெழுகுவர்த்திக்கு பெலன் உண்டு. நம்முடையவைகளை அழித்து தேவனுக்காய் பற்றி எரியவேண்டிய நாட்களுக்குள்ளாக நாம் கடந்து வந்திருக்கிறோம். யோவானைக் குறித்து ‘அவன் எரிந்து பிரகாசிக்கிற வெளிச்சமாயிருந்தான், அவனுடைய வெளிச்சத்தில் நீங்களும் நடக்க மனதாயிருந்தீர்கள்.’ என்றே வேதம் சொல்லுகின்றது.

யோவான் ஸ்நானகன் கொஞ்ச காலம் மட்டுமே இவ்வுலகத்தில் வாழ்ந்தான், ஆனால் நானூறு ஆண்டுகளாக தேவ சத்தம் கேட்காமலிருந்த இருட்டை அவன் அகற்றிவிட்டதோடு ஆண்டவருக்கான வழியையும் அவன் ஆயத்தப்படுத்திவிட்டான். வனாந்தரமோ, வாழ்க்கையின் பாடுகளோ அவனது ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தவில்லை. இருளைக் கண்டு நாம் அஞ்சிவிடவேண்டாம்,

யோவான் ஸ்நானகனைப்போல எரிந்து பிரகாசிக்க நாம் ஆயத்தமென்றால் இவ்வுலகத்தின் இருளை நாம் எளிதில் அகற்றிவிட முடியும். இருளை அகற்ற ஒரு மெழுகுவர்த்தி போதுமானது, ஆனால், அந்த மெழுகுவர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்னை அழித்துக்கொள்ள ஆயத்த மாக இருக்கவேண்டும்.

தேவ மகிமையை நாம் இந்த உலகத்திற்கு காண்பிக்கவேண்டும். என்னைப் பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்ற வைராக்கியம் இன்று நமக்குள் உருவாகவேண்டும். கெத்சமெனே சிலுவையும் பாடுகளும் இல்லாமல் உயிர்த்தெழுதலின் ஈஸ்டர் கொண்டாட்டம் இல்லை.

## உருவாக்கியவருக்கு ஒரே நாள் போதுமானது

இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப் பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப்பெற்றும் இருக்கிறது. பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார், பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார். (ஏசாயா 66:8,9).

நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் புதிய காரியத்தை நமது சொந்த வாழ்க்கையிலும், ஊழியத்தின் பாதையிலும், குடும்ப வாழ்க்கையிலும் செய்ய தேவன் விரும்புகின்றார். பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் தடுப்பேனோ என்று தேவன் முழக்கமிடுகின்றார். அவரையே நாம் விசுவாசிக்க வேண்டும்.

தேவன் உருவாக்கும் எழுப்புதலை தடைசெய்ய இந்த உலகத்தின் எந்த மனிதனாலும் இயலாது. ஒரே நாளிலே சீயோனை வேதனைக்குள்ளாக்கி குமாரர்களை பிறப்பிக்கச்செய்வது தேவனுக்கு எளிதான காரியம். அதற்கு தேவன் விரும்புவதும், எதிர்பார்ப்பதும் நம்முடைய ஆழமான அர்ப்பணிப்பையே. மரியாளின்மேல் தூய ஆவியானவர் அன்று நிழலாடியதுபோல இன்றும் நம்மேல் அசைவாட அவர் போதுமானவர். தேவதூதன் மரியாளுக்குப் பிரதியுத்தரமாக: 'பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்' என்று கூறியதுபோல, நம்மிடத்திலும் புதிய காரியங்களை உருவாக்கி அவற்றினால் இவ் உலகத்தை சுவிசேஷத்தின் ஆளுகைக்குள் கொண்டுவருவதே தேவதிட்டம்.

முழு தேசத்திலும் எழுப்புதலைக் கொண்டுவர தேவனுக்கு ஒரே நாள் போதுமானது. திருச்சபையின் காரியங்களிலோ, ஊழியத்தின் காரியங்களிலோ புதிய காரியங்களைச் செய்ய தேவனுக்கு ஒரேநாள் போதுமானது. தேவனே எழுப்புதலின் நாயகர். அவரது கரங்களில்



புதிய காரியங்களை பெற்றெடுக்க நம்மையும் நம் வாழ்க்கையையும் நாம் அர்ப்பணிப்போமென்றால், தேவன் நம்மைக்கொண்டு தேசத்தில் பெரிய அசைவை உண்டுபண்ணமுடியும். இது போலியான எழுப்புதல் அல்ல, காற்றைப் பெற்றெடுப்பது அல்ல. நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை தனது வாலினால் இழுத்துத் தள்ளும் சாத்தானையும் நிலைகுலையப் பண்ணுகிறவர்களைப் பிறப்பிக்கமுடியும்.

நான் எந்த வேதனையையும், பாடுகளையும் சோதனையையும், துக்கங்களையும் பொறுத்துக்கொள்ளவும், அவைகளைத் தாங்கிக் கொள்ளவும், புதிய காரியங்களில் உருவாக எந்த தியாகத்தையும் செய்ய தயார் என்று தம்மை முற்றிலும் அர்ப்பணிப்போரே தேவனுக்கும், திருச்சபைக்கும் இன்றைய தேவையாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவூட்டும் கற்களின் நிதர்சனம்

யோசுவா நான்காம் அதிகாரம்

எம். எஸ். வசந்தகுமார்



இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த பூமிக்குள் செல்வதற்குப் பெருந் தடையாக இருந்த யோர்தான் நதியை அவர்கள் கடந்துசென்ற பின்னர் செய்த மிகவும் முக்கியமான காரியத்தை யோசுவா நான்காம் அதிகாரம் அறியத்தருகின்றது. இதனால்தான் "ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்து தீர்ந்தபோது" என்று இவ்வதிகாரம் ஆரம்பமாகின்றது (யோசு.4:1). மூன்றாம் அதிகாரத்தில் அவர்கள் எவ்வாறு யோர்த்தான் நதியை கடந்தனர் என்பதைப் பார்த்தோம். யோர்தான் நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடும் அறுவடை காலத்தில், தேவன் அந்நதியின் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி இஸ்ரவேல் மக்கள் அதைக் கடந்து போவதற்கான வழியை ஏற்படுத்தினார் (யோசு.3:14-17). மக்கள் அனைவரும் யோர்தான் நதியைக் கடந்த பின்னர் மறுபடியும் யோசுவாவுடன் பேசும் தேவன், வெட்டாந்தரையாக இருந்த அந் நதியில் பன்னிரண்டு கற்களை எடுக்கும்படி கூறுகிறார்.

ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்து தீர்ந்தபோது, கர்த்தர் யோசுவாவை நோக்கி: நீங்கள், ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவ ராக ஜனங்களில் 12 பேரைத் தெரிந்துகொண்டு, இங்கே யோர்தானின் நடுவிலே ஆசாரியர்களின் கால்கள் நிலையாய் நின்ற இடத்திலே 12 கற்களை எடுத்து, அவைகளை உங்களோடே கூட அக்கரைக்குக் கொண்டு போய், நீங்கள் இன்று இரவில் தங்கும் ஸ்தானத்திலே அவைகளை வையுங் கள் என்று அவர்களுக்குக் கட்டளையிடுங்கள் என்றார் (யோசுவா 4:1-3).

அக்காலத்தில் தேவனுடைய பிரசன்னத்துக்கு அடையாளமாயிருந்த உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து மக்களுக்கு முன்பாகச் சென்ற ஆசாரி யர்களின் கால்கள் யோர்தானின் தண்ணீரில் பட்ட உடனே அந்நதியின் தண்ணீர் இரண்டாகப் பிரிந்தது மாத்திரமல்ல (யோசுவா 3:15-16), சகல மக்களும் நதியைக் கடந்து தீரும் வரை அவர்கள் நதியின் நடுவில் நின்று கொண்டிருந்தனர் (யோசு.3:17). மக்கள் அனைவரும் நதியைக் கடந்தபின், ஆசாரியர்கள் நதியில் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து 12 கற்களை எடுக்கும்படி கூறும் தேவன் அவற்றை நதியின் அக்கரையில் அவர்கள் அன்றிரவு தங்கும் இடத்தில் வைக்கும்படி அறிவுறுத்தினார் (யோசுவா 4:3).

தேவன் யோசுவாவுடன் பேசுவதற்கும் முன்பே, மூன்றாம் அதிகாரத்தி லேயே அவன் பன்னிருவரைத் தெரிவுசெய்தது (யோசுவா 3:12) அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் பன்னிரு வரைத் தெரிவுசெய்வதைப்பற்றி மாத்திரமே மூன்றாம் அதிகாரத்தில் தேவன் யோசுவாவிடம் கூறியிருந்ததாகக் கருதுகின்றனர். ஏனையவர்கள், இவ்வதி காரத்தில் தேவன் யோசுவாவுடன் பேசுபவைகள் மூன்றாம் அதிகாரத்தில் யோசுவா பன்னிருவரைத் தெரிவுசெய்வதற்கும் முன்பே தேவன் அவனுடன் கூறியவைகள் என்று எண்ணுகின்றனர். ஆனால், மக்கள் அனைவரும் யோர் தானைக் கடந்த பின்பு தேவன் யோசுவாவுடன் பேசுவதாகவே நான்காம் அதிகாரத்தின் ஆரம்ப வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், பெரும் பாலான வேதஆராய்ச்சியாளர்கள் யோசுவா 3ம் 4ம் அதிகாரங்கள் காலக் கிரம ஒழுங்குமுறையில் எழுதப்படவில்லை என்று கூறுகின்றனர். ஆனால், "யோசுவா எதற்காகப் பன்னிருவரைத் தெரிவுசெய்திருந்தான் என்பதை அறிந்திருந்த தேவன், அவனை அதைசெய்ய வைப்பதற்காகவே அவனோடு இவ்வதிகாரத்தில் பேசுகின்றார்." அதாவது, இஸ்ரவேல் மக்கள் செங்கடலை கடந்தபின்னர் குறுகிய காலத்திற்குள்ளாகவே தேவனின் அற்புத செயலை மறந்துவிட்டதை அறிந்திருந்த யோசுவா, யோர்தான் நதியைக் கடந்து வாக்குத்தத்த தேசத்திற்குள் வந்ததை எவரும் மறந்துவிடாமல் எப்பொழு தும் நினைவில் வைத்திருப்பதற்காக எதைச் செய்யவேண்டும் என்று எண்ணி இருந்தாரோ அதைச் செய்யும்படி அறிவுறுத்தும் கட்டளையாகவே தேவன் யோசுவாவுடன் பேசும் வார்த்தைகள் உள்ளன.

யோசுவாவின் மனதில் இருந்த காரியத்தையே தேவனும் அவரைச் செய்யச் சொல்வது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஆனால், யோசுவா தேவனின் சிந்தையை அறிந்து அதன்படி செயற்படுகிறவராக இருந்ததினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனும் அவரது மனவிருப்பத்தின்படி செயற்படுகிற வராக இருந்தார். இதனால்தான், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் யோசுவாவினுடைய வார்த்தையின்படி தேவன் செயற்பட்டுள்ளதாக 9ம் அதிகாரத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. உண்மையில், நாமும் தேவனுடைய சிந்தையை அறிந்தவர்களாக அவரது வார்த்தையின் படி வாழும்போது, தேவனும் நமது மனவிருப்பங்களின் படி நமக்குச் செய்கிறவராக இருப்பார். இதை அனுபவ ரீதியாக அறிந்திருந்த சங்கீதக்காரன், "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்.37: 4) என அறிவுறுத்தியுள்ளான்.

இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக்கடந்து செல்வதை எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பதற் காக செய்யவேண்டிய காரியத்தைச் செய்வதற்காக, நதியைக் கடப்பதற்கும் முன்பே யோசுவா இஸ்ரவே லின் 12 கோத்திரத்திலும் கோத்திரத்திற்கு ஒருவனாக பன்னிருவரைத் தெரிவுசெய்திருந்தார். இவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை இப்பொழுது தேவன் யோசு வாவுக்கு கூறுகிறார். தேவனின் இவ்வறிவுறுத்தலை யோசுவா, தான் ஏற்கனவே இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரத்திலுமிருந்து தெரிவு செய்திருந்த பன்னிரு வரிடமும் (யோசுவா 3:12) கூறுகின்றார்.

அப்போது யோசுவா இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவராக ஆயத்தப்படுத்தி யிருந்த 12 பேரை அழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் யோர்தானின் மத்தியில் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகக் கடந்துபோய், உங்க ளுக்குள்ளே ஒரு அடையாளமாயிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் இலக்கத்திற்குச் சரியாக, உங்களில் ஒவ்வொருவன் ஒவ்வொரு கல்லைத் தன் தோளின்மேல் எடுத்துக் கொண்டு போங்கள் (யோசுவா 4:4-5).

யோசுவாவினால் தெரிவுசெய்யப்பட்ட பன்னிருவரும் மறுபடியுமாக யோர்தான் நதியில் ஆசாரியர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்குச்சென்று 12 கற்களை எடுத்துக்கொண்டு வரவேண்டியவர்களாய் இருந்தனர். 5ம் வசனத்தில் "கடந்துபோய்" என்னும் சொல் இதை அறியத் தருகிறது. மேலும் இவர்கள் அக்கற்களைத் தங்கள் "தோளின்மேல் எடுத்துக்கொண்டு போனதி னால்" அவர்கள் சிறிய கற்களை அல்ல, ஓரளவுக்குப் பெரிய கற்களையே எடுத்துச் சென்றுள்ளனர். இந்தக் கற்கள் எதற்காக எடுக்கப்பட்டன என்பதை யோசுவா மக்களுக்கு 6ம் 7ம் வசனங்களில் விளக்கிக் கூறினார்.

நாளை இந்தக் கற்கள் ஏதென்று உங்கள் பிள்ளைகள் உங்களைக் கேட்கும்போது நீங்கள்: கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர் பிரிந்துபோனதினால் அவைகள் வைக்கப்பட் டிருக்கிறது. யோர்தானைக் கடந்துபோகிறபோது, அதன் தண்ணீர் பிரிந்துபோயிற்று. ஆகையால் இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு என்றைக்கும் நினைப் பூட்டும் அடையாளம் என்று சொல்லுங்கள் என்றான்.

இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியில் இருந்து எடுத்த 12 கற்களும் அவர்கள் அந்நதியைக் கடந்து வந்ததை அவர்கள் மறக்காமல் இருப்பதற்காக அவர் களிடம் இருக்கவேண்டிய நினைவுச் சின்னங்களாக இருந்தன. இவர்கள் இக்கற்களை யோர்தான் நதியின் அக்கரையில், அந்நதியைக் கடந்த தினம் தங்கியி ருந்த இடத்திலே நினைவுச் சின்னமாக வைத்தார்கள்.

யோசுவா கட்டளையிட்டபடி இஸ்ரவேலர் செய்து, கர்த்தர் யோசுவாவோடே சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் இலக்கத்திற்குச் சரியாக 12 கற்களை யோர்தானின் நடுவில் எடுத்து, அவைகளைத் தங்களோடேகூட அக்கரைக்குக் கொண்டுபோய், தாங்கள் தங்கின இடத்திலே வைத்தார்கள் (யோசுவா 4:8).

யோர்தான் நதியைக் கடந்த இஸ்ரவேல் மக்கள் அந் நதியிலிருந்து எடுத்த கற்களை நினைவுச் சின்னமாக வைத்த இடம் "கில்கால்" என்பதை 20ம் வசனம் அறியத் தருகின்றது. யோர்தான் நதியின் மேற்குக் கரையில் எரிகோ நகரத்திற்கு இரண்டு மைல்கள் வடகிழக்கில், "வட்டம்" அல்லது "சக்கரம்" என்னும் அர்த்தமுள்ள இடமே கில்கால் ஆகும். வாக்குத்தத்த பூமியில் சமாரியாவுக்கு வடக்கிலும் கில்கால் என்னும் பெயரில் ஒரு பட்டணம் இருந்தது (2ராஜா.2:1-2). சில ஆராய்ச்சியாளர்கள் இப்பட்டணத்துக்கு கிழக்கிலேயே இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், வாக்குத்தத்த பூமியில் இஸ்ர வேல் மக்கள் கைப்பற்றிய முதலாவது பிரதேசமாக எரிகோ இருப்பதனாலும், யோசுவா 3:16ல் யோர்தான் நதி பிரிவடைந்ததைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களும், (அதாவது எவ்வளவு தூரத்திற்குத் தண்ணீர் தேங்கி நின்றது, எதுவரைக்கும் நதியின் தண்ணீர் பிரிந்து ஓடியது என்ற குறிப்பு) எரிகோவுக்கு கிழக்கிலேயே இஸ்ரவேல் மக்கள் யோர்தானை கடந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

யோசுவா 4:10-19ம் வசனங்களில் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்த செயல் விரிவாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. உண்மையில், 3ம் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் சுருக்கமாக கூறப்பட்ட விஷயம் இவ்வசனங்களில் விபரமாக எழுதப்பட்டுள்ளதோடு, அவ்வதிகாரத்தில் சொல்லப்படாத சில விஷயங்களும் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. 12ம் வசனத் தின்படி யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் குடி யிருக்கப்போகும் ரூபன், காத், மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரிலும் யுத்தம் செய்யக்கூடிய 40,000 பேரும் "மோசே தங்களுக்குச் சொன்னபடியே" யோர்தானை கடந்து அடுத்த கரைக்குச் சென்றுள்ள னர். மோசேயின் காலத்திலேயே யோர்தானின் கிழக் குப் பகுதியை சுதந்தரித்துக்கொண்ட இவர்களுக்கு மோசே கொடுத்த அறிவுறுத்தல் எண்ணாகமம் 32:20-22லும் உபாகமம் 3:18-20லும் உள்ளது. மோசேயின் இவ்வறிவுறுத்தலை யோசுவாவும் அவர்களுக்கு கொடுத்திருந்தார் (யோசு.1:13-14). இஸ்ரவேல் மக்கள் அனைவரும் யோர்தான் நதியைக் கடந்த பின்னர்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசாரியர்கள் கரையேறினார்கள். அப்பொழுது மறுபடியுமாகத் தண்ணீர் ஓடத்தொடங்கியது (யோசு.4:18). இச்சம்பவம் யூதர்களுடைய நாட்காட்டியின் முதலாவது மாதம் 10ம் திகதி நடைபெற்றுள்ளது (யோசு.4:19). நாற்பது வருஷங்களுக்கு முன்பு இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டதும் அவர்களுடைய நாட்காட்டியின் முதலாவது மாதமாகவே இருந்தது (யாத். 12:2). அச்சமயம் அவர்கள் பஸ்கா பண்டிகையின் போது எகிப்திலிருந்து புறப்பட்டனர் (யாத்.12:3). இப்பொழுது அப்பண்டிகைக்கு நான்குநாட்களுக்கு முன் (யோசு.510-12) வாக்குத்தத்த பூமிக்குள் செல்கின்றனர். இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்து செல்லும் விதத்தில் தேவன் அற்புதம் செய்தது, அவர் ஏற்கனவே சொல்லியிருந்தபடி மோசேக்குச் சமமான நிலையை யோசுவாவுக்கு ஏற்படுத்திக்கொடுத்தது (யோசு.3:7, 4:14).

யோசுவா 4:10-14வரை, மூன்றாம் அதிகாரத்தின் சரித்திரத்தின் தொடர்ச்சியே உள்ளபோதிலும், இவ்வதிகாரம் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்ததை மறக்காமல் இருப்பதற்காக அவர்கள் வைத்திருக்கவேண்டிய நினைவுச் சின்னங்களான கற்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதனால் இக்கற்கள் நமக்கு கற்பிக்கும் சத்தியங்களை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

### 1. நினைத்துப் பார்க்கவேண்டும்

யோர்தான் நதியைக் கடந்த பின்னர் யோசுவா கில்காலில் நாட்டிய கற்கள் "நினைப்பூட்டும் அடையாளம்" என்று 7ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, அவர்கள் தேவனின் அற்புதமான செயல் காரணமாக யோர்தான் நதியைக் கடந்ததை அவர்களுக்கு நினைவூட்டும் சின்னமாக இக்கற்கள் இருந்தன. இதனால், பிற்காலத்தில் அவர்கள் இக்கற்களை பார்க்கும்போது, தேவன் எவ்விதமாக யோர்தான் நதியை இரண்டாகப் பிரித்து அதன் நடுவில் பாதையை உருவாக்கித் தங்களை வாக்குத்த பூமிக்குள் கொண்டுவந்தார் என்பதை அவர்களால் நினைத்துப் பார்க்கக்கூடியதாய் இருந்தது.

இஸ்ரவேல் மக்கள் 40 வருஷங்களுக்கு முன்பு யோர்தான் நதியைவிட பெரிய கடலை, அதாவது செங்கடலைக் கடந்து வரும்விதத்தில் தேவன் அக்கடலையும் இரண்டாகப் பிரித்து கடலின் நடுவில் பாதையை உருவாக்கி கொடுத்திருந்தார் (யாத்.14:21-22). எனினும், அச்சமயம் தேவன் நினைவூட்டும் கற்களைப்பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் இப்பொழுது இதைப்பற்றி அவர் குறிப்பிடுவதற்குக் காரணம், இஸ்ரவேல் மக்கள் செங்கடலை கடந்து குறுகிய காலத்திற்குள்ளாகவே தேவன் செய்த அந்த அற்புதச் செயலை மறந்துவிட்டனர். அவர்கள் செங்கடலை கடந்து சீனாய் மலையடிவாரத்தில் தங்கியிருந்த காலத்தில் தேவனைச் சந்திப்பதற்காக மோசே மலையுச்சிக்கு சென்றபோது, மோசேயையும் தேவன் அவர்களுக்காகச் செய்த அற்புதச் செயல்களையும் மறந்தவர்களாக தங்களிடத்திலிருந்த தங்க ஆபரணங்கள் அனைத்தையும் உருக்கி ஒரு கன்றுக்குட்டியைச் செய்து, அதுவே தங்களை எகிப்திலிருந்து விடுவித்துக்கொண்டு வந்த தெய்வம் என்று அதை வழிபடத் தொடங்கினார்கள். இதனால், யோர்தான் நதியை கடந்தபின்னர் இஸ்ரவேல் மக்கள் இவ்விதமாகத் தேவனை மறந்துபோகாமல், அவர் செய்த அற்புதச் செயலை என்றும் நினைவில் வைத்திருக்கும் விதத்தில் அச்சம்பவத்தை நினைவூட்டும் கற்களை வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். உண்மையில், "அவர்கள் ஒருபோதும் இவ்வற்புதச் செயலை மறந்துபோகாமல் இருப்பதற்காகவே நினைவூட்டும் கற்கள் கொடுக்கப்பட்டன."

மனிதரின் மிகப் பெரிய எதிரி அவர்களுடைய ஞாபக மறதியே. பொதுவாக மனிதர் தாங்கள் எதையெல்லாம் மறக்கக்கூடாதோ அதையெல்லாம் மறந்துவிடுகின்றனர். இதனால் நமக்கு நினைவூட்டும் கற்கள் அவசியப்படுகின்றன. மனிதர் புதிய இடங்களுக்குச் செல்லும்போது, அவ்விடத்திற்குச் சென்றதை நினைவூட்டும் பொருட்களை அல்லது படங்களை வாங்குவது வழக்கம். வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைப் புகைப்படங்களாகவும், வீடியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளாகவும் பதிவுசெய்வதும் தற்போது வாடிக்கையாகிவிட்டது. நாம் செய்யும் காரியங்களையும், நம்முடைய வாழ்வில் வரும் முக்கிய நிகழ்வுகளையும் மறக்காமல் இருப்பதற்காக ஞாபகப் பொருட்களை அல்லது படங்களை வைத்திருக்கும் நாம், தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் காரியங்களை மறக்காமல் இருப்பதற்காக எதையும் செய்வதில்லை. இதனால், தேவன் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை உடனடியாகவே மறந்துவிடுகின்றோம். தேவன் நம்முடைய வாழ்வில செய்தவற்றை நாம் மறக்காமல் இருப்பதற்கு அவருடைய செயல்களை நினைவூட்டும் சின்னங்கள் நமக்கு அவசியமாய் உள்ளன. இவற்றைப் பொருட்களாக அல்லது எழுதப்பட்ட குறிப்புகளாக நாம் வைத்திருக்கலாம்.

## 2. நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை நமக்கு நினைவூட்டும் சின்னங்களை வைத்திருக்கும்போது, கடந்தகாலத்தில் நம்மோடிருந்து நம்மை வழிநடத்தி வந்த தேவன் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அதேவிதமாகச் செயற்படுவார் என்னும் நிச்சயத்தையும் அவைகள் நமக்கு கொடுக்கும். உண்மையில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் வைத்திருந்த நினைவுச் சின்னங்கள், இதுவரையில் உதவிசெய்த தேவன் இனிமேலும் தொடர்ந்து உதவிசெய்வார் என்ற நம்பிக்கையைப் பக்தர்களுக்குக் கொடுத்துள்ளன.

இஸ்ரவேல் மக்களுக்குப் பெலிஸ்தரோடு ஏற்பட்ட யுத்தத்தில் தேவன் வெற்றியைக் கொடுத்தபோது, “சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர் என்று பேரிட்டான்” என்று 1சாமுவேல் 7:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் சாமுவேல் நாட்டிய கல் அதுவரை கர்த்தர் அவர்களுக்கு செய்த உதவியை நினைவூட்டுவது மட்டுமல்ல, இனிமேலும் அவர்களுக்கு உதவிசெய்வார் என்னும் நிச்சயத்துடனும் நாட்டப்பட்ட கல்லாக உள்ளது. எனவே, கடந்த காலத்தில் தேவன் நம் வாழ்வில் செய்த காரியங்களை நினைவூட்டும் கற்கள் அல்லது அதைப் பற்றிய குறிப்புகள் நம்மிடத்தில் இருக்கும்போது, அவைகள், இனிவரும் நாட்களிலும் தேவன் நம்முடைய வாழ்வில் செயல்படுவார் என்னும் நிச்சயத்தை நமக்குத் தரும்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நெருக்கடியான ஒரு சூழ்நிலைகளில் அகப்படும்போது, என்ன செய்வது என்பதை அறியாது திகைத்து தடுமாறுகிறவர்களாக உள்ளனர். உண்மையில், “கடந்த காலத்தில் தேவன் செய்தவற்றை மறந்துவிடுவதினாலேயே பலர் நிகழ்கால நெருக்கடியின்போது அவரை நம்பாதவர்களாக இருக்கின்றனர்.” ஆனால், இத்தகைய சந்தர்ப்பங்களில், கடந்தகாலத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டபோது தேவன் எப்படி நமக்கு உதவிசெய்தார் என்பதை நாம் நினைத்து பார்க்கவேண்டும். அப்போது கடந்த காலத்தில் நம்மோடிருந்து நமக்கு உதவி செய்த தேவன் இப்போதும் அதேவிதமாக உதவி செய்வார் என்னும் நம்பிக்கை நமக்கு ஏற்படும். உண்மையில், தாவீதின் வாழ்வு இதற்குச் சிறந்த விவரணமாகும். நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும்போது, கடந்த காலத்தில் தேவன் தனக்கு எப்படி உதவி செய்தார் என்பதை நினைத்து பார்ப்பது அவனது பழக்கமாய் இருந்தது.

இதனால்தான் ஆரம்பத்தில் அழுது புலம்பும் நிலையில் ஆரம்பமாகும் அவனது சங்கீதங்கள் இறுதியில் தேவனைத் துதித்து போற்றுவதுடன் நிறைவு பெறுகின்றன. இதற்குக் காரணம், ஆரம்பத்தில் தன்னுடைய சூழ்நிலையைப் பார்த்துப் புலம்பி தேவனிடம் உதவிக்காக மன்றாடும் அவன், உடனடியாக கடந்த காலத்தில் தேவன் தனக்கு செய்த உதவிகளை நினைத்துப் பார்க்கின்றான். இதனால், கடந்த காலத்தில் தன்னோடிருந்து தனக்கு உதவிசெய்த தேவன் நிகழ்காலத்திலும் தனக்கு உதவுவார் என்னும் நம்பிக்கை ஏற்பட, தேவனைத் துதித்து ஸ்தோத்தரிப்பவனாக சங்கீதங்களை நிறைவு செய்கிறான்.

இதைப்போலவே நாமும் நிகழ்கால நெருக்கடிகளின் போது கடந்தகாலத்தில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை நினைத்து பார்க்கவேண்டும் அப்போது நிகழ்கால துயரத்தையும் தேவன் மாற்றுவார் என்னும் நம்பிக்கையில் நம்முடைய அழுகை ஆனந்தக் களிப்பாய் மாறும்.

தேவன் கடந்த காலத்தில் செய்ததை நினைத்துப் பார்த்ததினால், நிகழ்கால நெருக்கடியிலும் தேவனின் உதவி கிடைக்கும் என்னும் நிச்சயம் தாவீதுக்கு இருந்ததை அவன் கோலியாத் என்னும் இராட்சத மனிதனுடன் போரிடச்சென்ற சம்பவம் சிறப்பான விதத்தில் அறியத்தருகிறது. இஸ்ரவேல் மக்கள் அனைவரும் கோலியாத்தைப் பார்த்து அஞ்சி நடுங்கியபோதும், தாவீது இராட்சத மனிதனைப் பார்த்து பயப்படாமல், தான் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது சிங்கத்திடமும் கரடியிடமிருந்தும் தேவன் தன்னை எவ்வாறு பாதுகாத்தார் என்பதை நினைத்துப் பார்த்தினால், “என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்த பெலிஸ்தனின் கைக்கும் தப்புவிப்பார்” என்று அறிவித்தவனாக கோலியாத்துடன் போரிடச் சென்றான் (1சாமு.17:37).

இவ்விதமாக நாமும் நிகழ்கால நெருக்கடியின்போது கடந்த காலத்தில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது கடந்த காலத்தில் நமக்கு உதவி செய்த தேவன் இப்பொழுதும் நமக்கு உதவி செய்வார் என்னும் நிச்சயம் ஏற்படும். இத்தகைய நிச்சயம் நமக்கு ஏற்படுவதற்கு, கடந்த காலத்தில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்ததை ஞாபகப்படுத்தும் நினைவுச் சின்னங்களை நாம் வைத்திருக்கவேண்டும். அப்போது அது நம்முடைய விசுவாசத்திற்கு பெரும் உதவியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 3. நிரூபித்துக் காட்டவேண்டும்

தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை மறக்காமல் இருப்பதற்காக நாம் வைத்திருக்கும் நினைவூட்டும் சின்னங்கள் நமக்கு மாத்திரமல்ல, நம்முடைய பிள்ளைகளுக்கும் தேவனின் செயல்களை அறிவிப்பவைகளாய் உள்ளன. இதனால், கடந்த காலத்தில் தேவன் நமது வாழ்வில் அற்புதமான விதத்தில் செயல்பட்டார் என்பதை நினைத்து, தேவன் நிகழ்காலத்திலும் இதேவிதமாகச் செயற்படுவார் என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்வது மாத்திரமல்ல, இதை நம்முடைய பிள்ளைகளுக்கு நிரூபித்து காட்டவேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். அதாவது, கடந்த காலத்தில் தேவன் நமது வாழ்வில் செயற்பட்டதுபோல நிகழ்காலத்திலும் செயற்படுகிறவர் என்பதை நம்முடைய பிள்ளைகள் அறிந்துகொள்வதற்காகவும் நினைவுச் சின்னங்களை வைத்திருக்கவேண்டும் என்றும் யோசுவா இவ்வதிகாரத்தின் இறுதிப் பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் யோர்தானில் எடுத்துக் கொண்டுவந்த அந்த 12 கற்களையும் யோசுவா கில்காலிலே நாட்டி, இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நாளை உங்கள் பிள்ளைகள் இந்தக் கற்கள் ஏதென்று தங்கள் பிதாக்களைக் கேட்கும்போது, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்து வந்தார்கள். பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கு, கல நாளும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும்படிக்கும், உங்கள் தேவனாகிய கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப்போகப் பண்ணினதுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும்செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிபோகப்பண்ணினார் என்று அறியக்கடவீர்கள் என்றான் (யோசுவா 4:20-24).

தேவன் யோசுவாவுக்குச் சொன்னதை(யோசு.4:6-7) அவன் இவ்வசனங்களில் மக்களுக்கு அறிவிக்கிறான். இஸ்ரவேல் மக்கள் "கில்கால்" என்னுமிடத்தில் நாட்டிய கற்களை பற்றி எதிர்காலத்தில் பிள்ளைகள் கேட்கும்போது, தேவன் எவ்விதமாக யோர்தான் நதியைக் கடப்பதற்கு உதவிசெய்தார் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறும்படி அறிவுறுத்தும் யோசுவா, 40 வருஷங்களுக்குமுன்பு செங்கடலைக் கடப்பதற்குத் தேவன் தங்களுக்கு உதவிசெய்ததையும் சுட்டிக்காட்டுகிறார். யோசுவாவின் வார்த்தைகள், தேவன் எக்காலத்திலும் தம் ஜனங்களுக்கு உதவிசெய்கிறவர் என்பதை அறியத்தருகின்றன. இதனால்தான், 24ம் வசனத்தில், "நாங்கள் செங்கடலைக் கடந்ததுபோல நீங்கள் யோர்தான் நதியைக் கடந்தீர்கள்" என்று கூறுகின்றார். அதாவது நாற்பது வருஷங்களுக்கு முன்பு தேவன் எவ்விதமாகச் செயற்பட்டாரோ, அதேவிதமாக இப்பொழுதும் செயற்பட்டுள்ளார் என்பதையே யோசுவா சுட்டிக்காட்டுகின்றார். உண்மையில், யோர்தான் நதியைத் தங்களால் சுயமாகக் கடந்துசெல்ல முடியாது என்பதை அறிந்திருந்த யோசுவா, நாற்பது வருஷங்களுக்கு முன்னர் தேவன் எப்படி செங்கடலை கடக்க உதவி செய்தார் என்பதை நினைத்துப் பார்த்ததினால், தாங்கள் செங்கடலைக் கடந்த விதமாக இந்த யோர்தான் நதியையும் கடப்போம் என்னும் நிச்சயத்துடன் மக்களை அந்நதிக்கரைக்கு அழைத்து வந்திருந்தார்.

தேவனும் அவனது நம்பிக்கையின்படியே யோர்தானின் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி அவர்கள் அதைக் கடப்பதற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுத்தார். இதன்மூலம், 40 வருஷங்களுக்குமுன்பு தேவன் எப்படி செயற்பட்டாரோ அதேவிதமாக இப்பொழுதும் செற்படுகிறவர் என்பதை யோசுவா இஸ்ரவேல் மக்களுக்கு நிரூபித்துக் காட்டுபவராக இருந்தார். இதைப்போலவே, கடந்த காலத்தில் எமது வாழ்வில் செயற்பட்ட தேவன் இப்போதும் செயற்படுகிறவர் என்பதை நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு நிரூபித்துக் காட்டவேண்டும். அப்பொழுது மாத்திரமே நம் பிள்ளைகள் நாம் வழிபடும் தேவனைத் தங்களது தெய்வமாக ஏற்றுக்கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை நாம் நினைத்துப் பார்ப்பதற்காகவும், கடந்த காலத்தில் நம் வாழ்வில் செயற்பட்ட தேவன் நிகழ்காலத்திலும் அதே விதமாகச் செயற்படுவார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகவும் நாம் வைத்திருக்கும் நினைவுச் சின்னங்கள், அவற்றைப்பற்றி நம்முடைய பிள்ளைகள் நம்மிடத்தில் விசாரித்து கேட்கின்ற விதத்தில் இருக்க வேண்டும். அதாவது தேவனைப்பற்றிய நம் நம்பிக்கை யும் நடத்தைமுறைகளும் நம் பிள்ளைகளுக்கு நாம் வழிபடும் தேவனைப்பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால் தேவனுடைய செயல்களை நினைவூட்டும் சின்னங் களை நாம் வைத்திருப்பதில் நம் பிள்ளைகளுக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை.

தற்காலத்தில் பல கிறிஸ்தவ குடும்பங்களில் பிள்ளை கள் தமது பெற்றோரின் மார்க்க வழிகளை பின்பற்றுவ தில்லை. பெற்றோரின் கிறிஸ்தவ நம்பிக்கைகளும், வழிபாட்டுமுறையும், பழக்கவழக்கங்களும் பிள்ளை களுக்கு அறிவீனமானவைகளாக அவசியமற்றவைக ளாக தென்படுகின்றன. இதனால்தான் தற்காலத்தில் மேற்குலக நாடுகளில் வயோதிபர் மாத்திரமே ஆலயங்களுக்குச் செல்வதையும், பல ஆலயங்கள் மூடப்பட்டு வருவதையும் காண்கிறோம். இத்தகைய நிலைமை மாறவேண்டுமானால் வேதாகம காலத்தில் செயற்பட்ட தேவன் நம்முடைய வாழ்விலும் செயல் படுகிறவர் என்பதை நம் பிள்ளைகள் காண்கின்ற விதத்தில் நாம் வாழவேண்டியது அவசியம்.

40 வருஷங்களுக்குமுன் செங்கடலைக் கடப்பதற்கு உதவிசெய்த தேவன், இப்போது யோர்தான் நதியை கடப்பதற்கு உதவிசெய்வார் என்பதை யோசுவா தன் கால மக்களுக்கு நிரூபித்துக் காண்பித்ததுபோல, நாமும் நமது காலத்து மக்களுக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் வேதாகமத்தில் செயற்பட்ட தேவன் இன்றும் செயற்படுகிறவர் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இஸ்ரவேல் மக்கள் யோர்தானைக் கடந்ததைப்பற்றி மட்டுமல்ல, தங்களுடைய மார்க்க சடங்காசாரங்க ளையும், வழிபாட்டு முறைகளையும், தேவகட்டளை களையும் தங்களது பிள்ளைகளுக்கு கற்பிக்கவேண்டி யவர்களாய் இருந்தனர்(யாத்.12:26-27, 13:14-16, உபா. 6:20). இஸ்ரவேல் மக்கள் கில்காலில் நாட்டியிருந்த கற்களைப்பற்றி அவர்களின் பிள்ளைகள் அவர்களிடத் தில் கேட்டதுபோலவே நமது பிள்ளைகளும் எமது கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கைகளையும் நடத்தை முறைகளையும் பற்றி நம்மிடத்தில் கேட்கும்போது அவர்களுக்குப் புரியும்விதத்திலும், அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையிலும் அவர்களுக்கு விளக் கங்கள் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

"நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு தேவனைப்பற்றிய சத்தியத்தைக் கற்றுக்கொடுக்காவிட்டால் அவர்கள் உலகத்தை பின்பற்றுகிறவர்களாகவே இருப்பார்கள்."

## 4. நிறுத்திக் கொள்ளவேண்டும்

இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்ததை நினைவில் வைத்திருப்பதற்காக இரண்டு இடங்களில் 12 கற்கள் வைக்கப்பட்டுள்ளன. யோர்தானின் மேற்கு கரையில் கில்கால் என்னுமிடத்தில் மாத்திரமல்ல, யோர்தான் நதியின் நடுவிலும் இக்கற்கள் வைக்கப்பட் டுள்ளன. எனவே இவ்வதிகாரத்தில் இரண்டு ஞாபகச் சின்னங்கள் உள்ளன. 9ம் வசனத்தில் ஆற்றின் நடு வில் நாட்டப்பட்ட கற்களைப்பற்றி குறிப்பிடுகின்றது.

யோர்தானின் நடுவிலும் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியரின் கால்கள் நின்ற இடத்திலே யோசுவா பன்னிரண்டு கற்களை நாட்டினான். அவைகள் இந்நாள் மட்டும் அங்கே இருக்கிறது (யோசுவா 4:9).

யோசுவா யோர்தான் நதியின் நடுவில் நாட்டிய கற்களைப்பற்றி வேதஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆரம்பத்தில் யோசுவா யோர்தான் நதியில் நாட்டிய கற்களையே பன்னிருவரும் எடுத்துக்கொண்டு வந்தனர் என்றும், இதனால் ஒரேயொரு நினைவுச் சின்னம் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது என்றும் சிலர் கருதுகின்றனர்.

இதனால், ஆசாரியர்கள் நிற்பதற்காக ஆற்றில்போடப் பட்ட மேடையே ஆற்றில் நாட்டப்பட்ட கற்கள் என்று சிலர் கூறுகின்றனர். சில ஆராய்ச்சியாளர்களுக்கு மூலப்பிரதியில் இவ்வசனம் குழப்பத்தை ஏற்படுத்துவ தாயுள்ளது. இதனால், ஆற்றிலிருந்து கற்கள் எடுக்கப் பட்டதைப் பற்றியே இவ்வசனம் கூறவேண்டும் என்று வாதிடுவர். சிலர் 9ம் வசனம் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டதாகக் கருதுகின்றனர். ஆனால் இவை ஆராய்ச்சி யாளர்களின் ஊகங்களே தவிர உண்மை அல்ல. பன்னிருவரும் ஆற்றில் கற்களை எடுத்த நேரத்தில் யோசுவா அவ்விடத்தில் 12 கற்களை நாட்டியுள்ளான். இவை இஸ்ரவேல் மக்கள் ஆற்றைக் கடப்பதற்கு முன்பு யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டவை என்று கருதப்படுகின்றது.

யோர்தான் நதியில் நாட்டப்பட்ட கற்களைப் பற்றி யோசுவா விளக்கம் எதுவும் கொடுக்காததினால், புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வியாக்கியானம் செய்யும் முறையின்படியே இக்கற்கள் எதற்காக நதியில் வைக்கப்பட்டன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். உண்மையில், "கில்காலில் வைக் கப்பட்ட கற்களை போலல்லாது ஆற்றில் நாட்டப்பட்ட வைகளுக்கு வித்தியாசமான காரணமும் அர்த்தமும் உள்ளன." புதிய ஏற்பாட்டு விளக்கத்தின்படி இஸ்ர வேல் மக்கள் செங்கடலை கடந்து சென்றது அவர்கள் பெற்ற ஞானஸ்நானத்திற்கான அடையாளமாய் உள்ளது (1கொரி.10:1-2). செங்கடலைக் கடந்த இஸ்ர வேலர்கள் வனாந்தரத்தில் மரணமடைந்திட, வனாந்தி ரத்தில் பிறந்த இஸ்ரவேலரே யோர்தான் நதியைக் கடந்ததினால், இது பிதாக்கள் செங்கடலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்ததற்கு ஒப்பான அவர்களுடைய ஞானஸ்நானத் திற்கான அடையாளமாயுள்ளது. ஞானஸ்நானமானது பாவத்திற்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு புதிய ஜீவனுக்குள்ளான உயிர்த்தெழுதலுக்கான அடையா ளமாய் இருப்பதினால் (ரோமர் 6:3-5, கொலோ.2:12), யோர்தானில் நாட்டப்பட்டு, தண்ணீர் மறுபடியும்சேர்ந்த பின்னர் தண்ணீருக்குள் மறைந்துபோன கற்கள் இஸ்ர வேல் மக்களுடைய பழைய பாவ வாழ்க்கை மரித்து அடக்கம்பண்ணப்பட்டதை நினைவூட்டும் அடையாள மாய் உள்ளது. அதாவது, அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில் எடுத்துக்கொண்டு வந்த கற்களை ஆற்றில் வைத்துவிட்டு சென்றது, அவர்கள் தங்கள் பழைய பாவ வாழ்க்கையை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து விட்டு, புதிய வாழ்வுக்குள்ளாக வாக்குத் தத்த பூமிக்குள் சென்றுள்ளதை அறியத்தருகின்றது.

இதனால், பிற்காலத்தில் அவர்கள் யோர்தான் நதியை பார்க்கும்போது தங்களது பழைய பாவ வாழ்க்கை மரித்துவிட்டது என்பதை அறிந்தவர்களாக தங்களு டைய பாவச்செயல்களை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்டும் அடையாளச் சின்னமாக தண்ணீருக்குள் மறைந்தபோன கற்கள் உள்ளன.

இக்கற்கள் "இந்நாள்வரைக்கும் இருக்கிறது" என்னும் குறிப்பு, யோசுவாவின் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் இக்கற்கள் அவ்விடத்தில் இருந்துள்ளதைச் சுட்டிக் காட்டும் வாக்கியமாகும். உண்மையில், "குறிப்பிடப் பட்டுள்ள சம்பவம் உண்மையில் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரமாகவே அக்காலத்தில் இத்தகைய சொற்பிரயோகங்கள் உபயோகிக்கப்பட்டன" அதுமாத்திரமல்ல, "குறிப்பிட்ட இடத்தைப்போய் பார்க்கத் தூண்டும் அறிவிப்பாக இது உள்ளது." இதைப்போலவே, தேவன் நமது வாழ்க்கை யில் செய்தக் காரியங்களை நினைவூட்டுவதற்காக நாம் வைத்திருப்பவைகள், மற்றவர்கள் தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை அறிந்துகொள்வ தற்கான ஆவலை ஏற்படுத்துகின்ற விதத்தில் இருக்க வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்

## சோதனைகளை மேற்கொள்ளுவது எப்படி?



இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் தான் பதில். எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் வென்றவர் அவரே (எபி 4:15). அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவல்லவராயிருக்கின்றார் (எபி 2:18).

நாம் முதலாவது நமது உடலின் அங்கங்களை ஜீவபலியாக அவரது பீடத்தில் படைக்கவேண்டும் (ரோ12:1). நாம் நம்முடையவர்கள் அல்ல. விலைக்கு வாங்கப்பட்டோம். நாம் அவருக்கே சொந்தம். எவரையும் இச்சையோடு இனி பார்ப்பதில்லை என்று உங்கள் கண்களோடு உடன்படிக்கை பண்ணுங்கள் (யோபு 31:1). விலக்கப்பட்டதை தொடக் கூடாதென்று உங்கள் கரங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்துவிடுங்கள். கிறிஸ்து எங்கே போகமாட்டாரோ அங்கே உங்கள் கால்களும் செல்லக் கூடாது. இப்படி ஒவ்வொன்றாய் ஒப்புக்கொடுங்கள் (ரோ 6:13). காலை தோறும் இந்த அர்ப்பணத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

உங்களுக்குள் வாசமாயிருக்கும் கிறிஸ்துவினாலே பாவத்திற்கு மறுப்புச் சொல்லும் வல்லமை பெறுவீர்கள். நீங்கள் கிறிஸ்துவோடு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, எழுந்திருந்து, பரமேறியுள்ளீர்களே (ரோம 6:3,4). கிறிஸ்துவோடு இவ்விதம் அடையாளப்படுத்திக் கொள்ளுதலை அடிக்கடி தியானியுங்கள். சோதனையை மேற்கொள்ள அவ்வப்போது பலம் பெற்றுக் கொள்ள கிறிஸ்து நமக்கு ஜெபிக்கப் போதித்துள்ளார். நமது மாம்சம் பலவீனமுள்ளது. நாம் விழித்திருந்து ஜெபித்தால்தான் சோதனையை மேற்கொள்வதற்கான நமது விருப்பம் நிறைவேறும் (மத் 26: 41).

கிறிஸ்து சோதிக்கப்பட்டபோது சாத்தானுக்கு எதிராக ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தைக் கைக்கொண்டார். (மத் 4:4,7,10: எபே 6:17). தவறாது வேதத்தைத் தியானியுங்கள். தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடி தாவீது அவரது வசனத்தைத் தன்னிதயத்தில் மறைத்து வைத்திருந்தான் (சங் 119:11). வசனத்தால் நிறைந்திருங்கள். சோதனையின் போது சரியான வசனத்தை ஆவியானவர் உங்களது நினைவுக்கு கொண்டுவருவார்.

தனித்திராதீர்கள். உங்களுக்கு தேவபிள்ளைகளின் ஐக்கியம் தேவை. முப்புரிநூல் சீக்கிரம் அறாது (பிர:9-12).

சோதனையை மேற்கொள்ளும் போதெல்லாம் யுத்தம்வலுக்கத்தான் செய்யும். "கெர்ச்சிக்கிற சிங்கம்" உங்களை விடமாட்டான் (1பேது 5:8). ஆனால் "உலகிலிருப்பவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்" (1யோவா 4:4). அவரது இரத்தத்தில் அடைக்கலம் புகுந்துவிடுங்கள். அவரது கிருபையில் சார்ந்திடுங்கள். பாவம் உங்களை மேற்கொள்ளாது (ரோம 6:14)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சோலை

# நச்சு புத்தகம்



'...அசுத்தமானதைத் தொடாதிருங்கள் '
(2 கொரிந்தியர் 6:17)

ஒரு நாள் ராமு வாசகசாலையொன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த, ஒரு புத்தகத்தை வாசிப்பதற்காக எடுத்தான்.

அப்போது அங்கு, ஒரு புத்தகத்திலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த பாம்புக் குட்டி ஒன்று பாய்ந்தோடியது. அதைக் கண்ட ராமு, அப்படியே புத்தகத்தை கீழே போட்டுவிட்டு அலறிக் கொண்டு ஓட ஆரம்பித்தான்.

அருமை தம்பி தங்கையரே, புத்தகத்திலிருந்த குட்டி நச்சு பாம்பைக் கண்டதும் ராமு பயந்து ஓடினான் அல்லவா? ஆனால் உங்களுக்குத் தெரியுமா? உங்கள் உள்ளத்தில் கூட நச்சுத் தன்மையை ஊட்டக்கூடிய கெட்ட புத்தகங்கள் பல உண்டு. ஆம், அப்படியான கெட்ட புத்தகங்களை நீங்கள் வாசிக்கக்கூடாது. அது உங்களை கெடுத்துவிடும். கெட்ட படங்களையோ, கெட்ட காட்சிகளையோ நாம் பார்க்கவே கூடாது.

புத்தகத்துக்குள்ளே பாம்பு இருக்குமென்று தெரிந்திருந்தால் நாம் அதைத் தொடக்கூட மாட்டோம் அல்லவா! ஆம், அதேபோல கெட்ட புத்தகங்களையும் நாம் தொடக்கூடாது. குட்டிப் பாம்பைக் கண்டவுடன் ராமு புத்தகத்தை வீசியதுபோல கெட்ட காரியங்களை கொண்ட எதையும் நாம் கண்டால் அதை கையிலே எடுக்கக்கூடாது.

நாம் அசுத்தமானதைத் தொடக்கூடாது, அவற்றை வாசிக்கக்கூடாது, பார்க்கவும் கூடாது என்பதற்கு வேத புத்தகத்திலே காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆம், நாம் அசுத்தமானதைத் தொடக்கூடாது. ஏனென்றால், இயேசு சுவாமி அவர் அசுத்தமானதை, பாவத்தை விரும்புகிறவரல்ல.

நாம் பரிசுத்தமாக நடந்து கொண்டால் மாத்திரமே அவருடைய பிள்ளைகளாக இருப்போம் என்று வேதவசனம் கூறுகிறது.

ஆம் அருமை தம்பி தங்கையரே, இயேசு சுவாமி நமக்குள்ளே வாழ்வாரானால், நாம் கெட்ட காரியங்களை, அசுத்தமானவற்றை, பாவமானதை பார்க்கவோ, வாசிக்கவோ, கேட்கவோ கூடாது. இதற்கு இயேசு சுவாமிதாமே எமக்கு உதவி செய்யும்படி இப்போதே வேண்டிக்கொள்வோமாக.



ஜெபம்:

அன்பின் ஆண்டவரே,
தீமையான காரியங்களை விட்டுவிட்டு
நன்மையானவற்றையே பார்க்கவும் பேசவும்
உதவி செய்தருளும் - ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமது திவ்ய கரங்களில் நான்

இ. வஷ்னி

தேவனே, நீர் என் பாதுகாப்பு; நீர் என்னைக் கைவிடுவதில்லை.
யுத்தம் மும்முரமாக இருந்தாலும் உம் சிறகுகளால் என்னை மூடினீர்.
வீதியில் நடக்கும்போதும், முட்புதர்களுக்குள் ஒளிந்துகொண்டபோதும்
வீட்டின் உள் அறையிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிட்டபோதும்
நீர் எனக்குப் பதிலளித்தீர்; என் பகைவரிடமிருந்து என்னைத் தப்புவித்தீர்.

தேவாலயத்தினுள் சிறுவனாக பணிவிடை செய்த நாட்களிலும்,
ஆலயத்திற்கு உமது ஜனத்தாரோடுகூட நடந்தவேளையிலும்,
பலரோடு சேர்ந்து பாடல்கள் பாடி மகிழ்ந்ததையும்,
ஜீவனுள்ள தேவனிடத்தில் உரிமையுடன் ஜெபித்ததையும்,
நான் நினைவுகூரும்போதெல்லாம் என் உள்ளம் உருகிப்போகின்றது.

உம்முடைய நாமத்தினிமித்தம் சுவிசேஷ பிரதிகளையும்
துண்டுபிரசுரங்களையும் ஊர் ஊராக விநியோகித்த போதும்...
இராமுழுவதும் உமது பிள்ளைகளோடுகூட விழித்திருந்து,
முழு இரவு ஜெபத்தில் உம்மை நெருங்கிவந்தபோதும்,
என்னில் உற்பத்தியான மகிழ்ச்சி பெரு வெள்ளத்தினை அனுபவித்தேன்...

தேவனே, இப்பொழுதும் நான் உம்மையே என்றும் துதிப்பேன்...
கடந்த காலத்தில் நீர் எனக்கு அன்பார்ந்த தேவனாயிருந்தீர்,
நிகழ்காலத்திலும் எனக்கான பாதுகாப்பு நீர் ஒருவரே,
எதிர்காலத்திலும் என்னுடைய மெய்யான மீட்பர் நீரே,
உம்முடைய திவ்ய கரங்களில் நான் என்றும் சரணடைவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of
Post of Sri Lanka under
No. QD/106/News/2013

BACK TO THE BIBLE
ජීවිතාලෝකය சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

To:

T \ 13422 \ 1 \ JAN2014
Ms J Vathshala
Methodist Church
Kaluwanchikudy 30200






விரைவில் உங்கள் கரங்களில்

"கண்ணோக்கினேன்"

இனிய பாடல்கள் அடங்கிய இறுவட்டு

சத்தியவசன புதிய வெளியீடு

மேலதிக விபரங்களுக்கு:
திரு. ரவிசங்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org